REGISTERED AS NEWSPAPER

# உதயன்

பக்கங்கள் - 20 விலை - 30 ரூபா    செய்தி: 021 493 0000    விளம்பரம்: 021 493 1111

சுடர் : 35  கதிர் : 352  கார்த்திகை 2ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 17 நவம்பர் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## அரியாலையில் 62 பேருக்கும் தொற்றில்லை

வவுனியாவில் பெண்ணுக்கு தொற்று

யாழ்ப்பாணம், நவ. 17
யாழ்ப்பாணம் அரியாலையில் 62 பேர் சுயதனிமைப் படுத்தப்பட்டிருந்த நிலை 18 ➤

## வெட்டுப்புள்ளியை தாண்டியோர் வீதம் வடக்கில் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், நவ. 17
வடக்கு மாகாணத்திலிருந்து தரம் 5 புலமைப்பரிசில் பரீட் சைக்குத் தோற்றியோ 18 ➤

## கரணவாயில் 6 பவுண் கொள்ளை

ஒரு மணித்தியாலமாக வீட்டில் தேடுதல்

யாழ்ப்பாணம், நவ. 17
வீடு புகுந்த முகமூடிக் கும்பல் வீட்டி லிருந்தவர்களைத் தாக்கி 6 பவுண் நகையைக் கொள்ளை யடித்துச் சென்றுள்ளது. 18 ➤

# மாவீரர்களை நினைவுகூர தமிழருக்கு உரித்து உண்டு

### அதைத் தடுத்து நிறுத்த இராணுவத் தளபதிக்கு எந்த அருகதையும் இல்லை என்று சம்பந்தன் பதிலடி

கொழும்பு, நவ. 17
தமிழினத்தின் உரிமைக்கான விடுதலைப் போராட்டத்தில் உயிர்நீத்த மாவீரர்களை- தமது உறவுகளை நினைவுகூர வடக்கு, கிழக்குத் தமிழ் மக்களுக்கு முழுமையான உரிமையுண்டு. அதைச் சட்டங்கள் கொண்டு தடுத்துநிறுத்த இரா ணுவத் தளபதிக்கோ அல்லது வேறு எவருக் குமோ எந்த அதிகாரமும் இல்லை. 18 ➤



## கொரோனா சாவு நேற்று 3

இதுவரை 61
மேலும் தொற்று 387 18 ➤

## மாவீரர்களை நினைவேந்த ஒருபோதும் இடமளியோம்!



### இராணுவத் தளபதி எச்சரிக்கை

கொழும்பு, நவம்பர் 17
புலிகள் அமைப்புக்கு புத்துயிர் கொடுக்கும் வகை யில் மாவீரர் தின நினைவேந்தலை பொது வெளியில் கடைப்பிடிப்பதற்கு இடமளிக்க 18 ➤

## நினைவேந்தல் உரிமையைத் தடுத்து தமிழ் மக்களை மேலும் சீண்டாதீர்!

### எதிர்க்கட்சித் தலைவர்கள் எச்சரிக்கை

கொழும்பு, நவ. 17
"போரில் உயிரிழந்தவர்களைப் பொது வெளியில் நினைவேந்த இந்த நாட்டிலுள்ள மூவின மக்க ளுக்கும் உரிமையுண்டு. அதைத் தடுத்து நிறுத்த அரசுக்கு அதிகாரம் இல்லை. எனவே, நினைவேந்தல் உரிமையைத் தடுத்து, தமிழ் மக்களை மேலும் சீண்ட வேண்டாம் என்று ராஜபக்ச அர சிடம் கேட்டுக்கொள் 18 ➤

## அலுவலகத்தில் காவலாளியின் சடலம்

யாழ்ப்பாணம், நவ. 17
கோப்பாய் பூதர் மடம் பகுதியில் உள்ள சமூக சேவை திணைக் களத்தின் பிராந்திய காரியால யத்தில் காவலாளியாக கடமை யாற்றி வந்தவர் நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டுள் ளார் எனக் கோப்பாய் 15 ➤




முச்சந்தி முரளி

## சுகாதாரத்துறை அனுமதித்தால் பாடசாலைகளைத் திறக்கலாம்

### அதிபர், ஆசிரியர்களின் ஆலோசனையும் பெறப்படும் என்கிறார் கல்வி அமைச்சர்

கொழும்பு, நவ. 17
சுகாதாரத் துறையினரின் அனுமதி கிடைத்த பின்னரே, பாடசாலைகள் மூன்றாம் தவணைக் கல்வி நடவ டிக்கைகளுக்காக மீளத் திறக்கப்படும். இது தொடர்பில் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களிட 15 ➤

## வட்டு. பொலிஸின் அசமந்தம் ஜனாதிபதியின் கவனத்துக்கு!

### கொண்டுசெல்கிறது பிரதேச சபை

யாழ்ப்பாணம், நவ. 17
வலி.மேற்கு பிரதேசத்தில் இடம்பெறும் சட்டவிரோத செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்துவதில் வட்டுக்கோட் 19 ➤

## வில்பத்து காடு அழித்த ரிஷாத் பதியுதீன் தனது நிதியில் மீள் நடுகை செய்யவேண்டும்

### மேன்முறையீட்டு நீதிமன்றம் அதிரடி உத்தரவு

(விரிவு -பக்கம் 2இல்)

## வடக்கு மாகாண இளையோருக்கு சுகாதாரத்துறையில் வேலைவாய்ப்பு

### விண்ணப்பிக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 17
சுகாதார அமைச்சால் துணை மருத்துவ சேவையைச் சேர்ந்த பாட சாலை பற்சிகிச்சையாளர், சுகாதார பூச்சியியல் அலுவலர், கண் தொழில் நுட்பவியலாளர், 17 ➤

## மயங்கி வீழ்ந்து சாவு


யாழ்ப்பாணம், நவ. 17
திடீரென்று மயங்கி வீழ்ந்து, வயோ திப பெண்ணொ 18 ➤




மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வில்பத்து காடழிப்பு சட்டவிரோதமானது ரிஷாத்துக்கு தொடர்கின்றது சிக்கல்

## சொந்தச் செலவில் மரங்களை மீள் நடுகை செய்ய மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு



**கொழும்பு, நவ. 17**
**ரிஷாத் பதியுதீன் மீள்குடியேற்ற அமைச்சராக இருந்த காலப்பகுதியில் அவரின் வழிகாட்டலின் பேரில், வடக்கில் இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றுவதற்காக வில்பத்து பகுதியில் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்கள் அகற்றப்பட்டமை சட்டவிரோதமானது என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.**

அத்துடன், ரிஷாத் பதியுதீனின் தனிப்பட்ட செலவில் குறித்த வனப்பகுதியை மீள்நடுகை செய்யுமாறும் மேல்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
அத்துடன், மனுதாரரான சுற் றுச்சூழல் நீதி மையத்தின் வழக்குகளுக்கான செலவையும் மீளச் செலுத்துமாறும் பிரதிவாதியான ரிஷாத் பதியுதீன் உள்ளிட்ட பிரதிவாதிகளுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
வடக்கில் இடம்பெயர்ந்தோரை மீளக்குடியேற்றுவதற்காக, வில்பத்து கல்லாறு வனப் பகுதியில் காடழிப்புச் செய்யப்பட்டமைக்கு எதிராக சுற்றுச்சூழல் நீதி மையத்தால் மேன்முறையீட்டு நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பு நேற்று பரபரப்புக்கு மத்தியில் அறிவிக்கப்பட்டுள்ளது.
மனுதாரர் தமது மனுவில், வில்பத்து தேசிய வனப் பூங்காவின் வட எல்லையில், கல்லாறு வனப் பகுதியிலுள்ள குறிப்பிட்ட வனப்பரப்பை காடழிப்புச் செய்து, வீடமைப்புத்திட்டத்தை நிறுவியமையானது, காடுகள் பாதுகாப்புச் சட்டத்தை மீறும் வெளிப்படையான சட்ட விரோத நடவடிக்கை எனத் தெரிவித்துள்ளனர். இதேவேளை இடம்பெயர்ந்த மக்களை வாக்களிப்பதற்கு அரச பேருந்துகளில் அழைத்துச் சென்று நிதி துஷ்பிரயோக நடவடிக்கையில் ஈடுபட்டார் என்று ரிஷாத் பதியுதீன் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டு சிறையில் உள்ளார். இதேவேளை அவரது சகோதரர், உயிர்த்த ஞாயிறு குண்டு வழக்கில் கைதாகி விடுவிக்கப்பட்டுள்ளார். (ஒ.22)

# கொரோனாவுக்கு மத்தியில் சூதாட்டம் எழுவர் கைது!

கொழும்பு, நவ. 17
கம்பளை, குறுந்துவத்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தொலஸ்பாகை பகுதியில் சூதாட்டத்தில் ஈடுபட்ட ஏழு பேரை பொலிஸார் கைதுசெய்துள்ளதுடன், பணம் மற்றும் வாகனங்களையும் கைப்பற்றியுள்ளனர்.
தீபாவளி பண்டிகைக்கு மறுநாளான 15 ஆம் திகதியே சிலர், சுகாதார நடைமுறைகளைமீறி சட்டவிரோதமாக இவ்வாறு சூதாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். வெளியிடங்களில் இருந்தும் வந்துள்ளனர்.
இது தொடர்பில் குறுந்துவத்த பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி விஜேரத்திரவின் வழிகாட்டலில், பொலிஸ் அதிகாரிகள் குழுவினர், சம்பவ இடத்துக்கு விரைந்து சுற்றிவளைப்பில் ஈடுபட்டனர். இதனையடுத்து அங்கிருந்தவர்கள் தப்பியோட முயற்சித்துள்ளனர். எழுவர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், ஏனையோரை கைது செய்வதற்கான தேடுதல் தொடர்கின்றது.
மூன்று ஓட்டோக்களும், சூதாட்டத்துக்கு பயன்படுத்தப்பட்ட பணமும் பொலிஸாரால் மீடக்கப்பட்டுள்ளன.
கைதானவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஒ.44)

# வடக்கு– கிழக்குக்கு சிவப்பு எச்சரிக்கை



கொழும்பு, நவ. 17
நாட்டில் தற்போது காணப்படும் மழையுடனான வானிலை தொடர்பில் வடக்கு கிழக்கில் உள்ள மாவட்டங்கள் உள்ளடங்கலாக 14 மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் தென்மாகாணங்களில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன்கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.
நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பல இடங்களில் பிற்பகலில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.
மேல், சப்ரகமுவ, மத்திய, தென், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சில இடங்களில் 100 மி.மீ க்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.
இடியுடன்கூடிய மழைபெய்யும் வேளைகளில் அந்தப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள். (ஒ.இ)

## கொரோனா நெருக்கடிக்குள்ளும் ஐ.நாவின் உயர்மட்ட தலைவர் விரைவில் கொழும்பு வருகை!

கொழும்பு, நவ. 17
ஐக்கிய நாடுகள் சபையின் உயர்மட்ட பிரதிநிதியொருவரை ஐ.நா. செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டெரெஸ், விரைவில் இலங்கைக்கு அனுப்பவுள்ளார். ஐ.நாவின் அரசியல் பிரிவு தலைவர் ரோஸ்மேரி டிகார்லோவே கொழும்பு வரவுள்ளார் எனவும், இங்கு உயர்மட்ட சந்திப்புகளில் ஈடுபடுவார் எனவும் தெரியவருகின்றது.
ஜனாதிபதி, பிரதமர், வெளிவிவகார அமைச்சர் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட சில சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளுடனும் அவர் சந்திப்புகளை நடத்துவதற்கு எதிர்பார்த்துள்ளார். அனைத்து சந்திப்புகளும் சுகாதார பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியிலேயே இடம்பெறவுள்ளன. ஐ.நாவின் கிளை அமைப்புகளுள் ஒன்றான மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திலிருந்து இலங்கை அரசு விலகியுள்ள நிலையில், பொறுப்புகூறல் கடப்பாட்டை நிறைவேற்றுவதற்குமுன்னெடுக்கப்படவுள்ள திட்டங்கள் தொடர்பில் அவதானம் செலுத்துவதை மையப்படுத்தியே ரோஸ்மேரி டிகார்லோவின் இலங்கை பயணம் அமையும் என இராஜதந்திர வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது. (ஒ.44)

# மைத்திரியின் வர்த்தமானி ஓராண்டின் பின் வெளியீடு

கொழும்பு, நவ. 17
சிங்கராஜ வனத்தை 36 ஆயிரத்து 474 ஹெக்டேயராக அதிகரிப்பது தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 11ஆம் திகதி கையெழுத்திட்டு வெளியிட்டுள்ள வர்த்தமானி அறிவித்தல் ஓராண்டுக்குப் பின்னர் வெளியிடப்பட்டுள்ளது.
கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 20 ஆம் திகதி என்று குறிப்பிடப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.
அண்மைக் காலமாக சிங்கராஜ வனத்துக்கு அருகில் நடக்கும் சட்டவிரோத நிர்மாணிப்புகள் காரணமாக சுற்றுச்சூழல் அமைப்புகள் உட்பட பல தரப்பினர் இந்த வர்த்தமானி அறிவித்தல் இதுவரை வெளியிடப்படாமை குறித்து கடும் எதிர்ப்புகளை வெளியிட்டிருந்தனர். (ஒ.இ)




# மினுவாங்கொட கொத்தணி முற்றுமுழுதாகக் கட்டுக்குள்!

## *இராணுவத்தளபதி பெருமிதம்*



கொழும்பு, நவ.17
மினுவாங்கொட கொத்தணி முற்றுமுழுதாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது என்று இராணுவத்தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.
மினுவாங்கொட கொத்தணியில் வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களாக அடையாளம் காணப்பட்ட 3 ஆயிரத்து 106 பேரில் தற்போது 136 நோயாளிகளே மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.
கொரோனா மூன்றாவது அலை கடந்த ஒக்ரோபர் 4 ஆம் திகதி மினுவாங்கொடவில் ஆரம்பித்தபோது அதை 3 ஆயிரத்து106 நோயாளிகளாக மட்டுப்படுத்த முடிந்தது என்றும் இந்தக் கொத்தணி தற்போது முற்றுமுழுதாக பூரண கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். (ற-இ)

# எம்.ஓ.எச்சின் அனுமதியுடனே சடலங்கள் கொண்டு வரலாம்

## வடக்குக்கு வெளியே இறப்பவர்களின் இறுதிக் கிரியை நடைமுறைகள் அறிவிப்பு

**யாழ்ப்பாணம், நவ. 17**

**வடமாகாணத்துக்கு வெளியே ஒருவர் உயிரிழந்தால் அந்த உடலை வட மாகாணத்துக்கு கொண்டுவந்து இறுதிச் சடங்கை நடாத்த வேண்டுமாயின் இறுதிச் சடங்கு நடைபெறவுள்ள பிரதேசத்தின் சுகாதார மருத்துவ அதிகாரியின் (எம்.ஓ.எச்.) முன் அனுமதி பெறப்பட வேண்டும். இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அனுமதியை வழங்குவதற்காக இறந்தவரின் விவரங்கள், இறப்பு ஏற்பட்ட மருத்துவமனை அல்லது இடம் போன்ற விவரங்கள் சுகாதார மருத்துவ அதிகாரிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அவர் இறப்பு ஏற்பட்ட மருத்துவமனையைத் தொடர்பு கொண்டு கொரோனாத் தொற்றால் இறப்பு ஏற்பட்டதா என்பதை உறுதிப்படுத்திக்கொண்டே அனுமதி வழங்கப்படும்.

கொரோனா தொற்றால் இறப்பு ஏற்பட்டிருந்தால் அல்லது அவ்வாறு இறப்பு ஏற்பட்டது எனச் சந்தேகிக்கப்பட்டால் மிக இறுக்கமான சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றியே இறுதிச் சடங்கு செய்வதற்கு அனுமதி வழங்கப்படும். உடல் மின்சார தகன இயந்திரத்திலேயே எரியூட்டப்பட வேண்டும். உடலம் வீட்டுக்குக் கொண்டுவரப்பட்டு ஆகக் கூடியது 3 மணித்தியாலம் மட்டுமே வீட்டில் வைத்திருக்க அனுமதிக்கப்படும். குடும்பத்தினர் மட்டுமே இறுதிச்சடங்கில் பங்குபற்றலாம். அவர்கள் அனைவரும் 2 வாரங்களுக்கு தனிமைப்படுத்தப்படுவர்.

அண்மையில் கொழும்பில் உயிரிழந்த ஒருவரின் உடலம் முன் அனுமதி பெறப்படாது கொழும்பிலிருந்து பாதி வழியில் வரும்போதே சுகாதார மருத்துவ அதிகாரிக்கு தகவல் வழங்கப்பட்டது. இதனால் சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்களும், குடும்பத்தினரும் சிரமங்களுக்கும், அசௌகரியத்திற்கும் உள்ளாகியுள்ளனர்.

எனவே வேறு மாகாணத்தில் இறப்பு ஏற்பட்டு வடமாகாணத்தில் இறுதிச் சடங்கு நடாத்த விரும்பினால் முன் கூட்டியே சுகாதார மருத்துவ அதிகாரியின் அனுமதி பெற்றபின் உடலத்தை இங்கு கொண்டுவருவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு பொதுமக்களை கேட்டுக்கொள்கின்றோம். இதன் மூலம் கொரோனா தொற்றிலிருந்து எமது சமூகத்தைப் பாதுகாப்பதுடன் ஏற்படும் நேரவிரயத்தையும் தவிர்த்துக்கொள்ளலாம், என்றுள்ளது. (ஒ.5)

# பி.சி.ஆர். இயந்திரத்தில் கோளாறு எதுவுமில்லை

## சீனத் தூதரகம் தெரிவிப்பு

கொழும்பு, நவ.17

கொழும்பு கிழக்கு ஆதார மருத்துவமனையில் உள்ள பி.சி.ஆர் இயந்திரத்தில் தொழிநுட்பக் கோளாறு எதுவும் இல்லை என இலங்கைக்கான சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான சீனத் தூதரகத்தின் உத்தியோக பூர்வ ருவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவொன்றிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

பரிசோதனை இயந்திரத்தின் பயன்பாடு அதிகரித்துள்ளமையாலேயே இயந்திரத்தின் செயல்பாடு பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், புதிய பி.சி.ஆர் இயந்திரத்தைக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் இன்னும் 3 அல்லது 4 நாள்களில் புதிய பி.சி.ஆர் இயந்திரத்தை நாட்டுக்கு கொண்டுவர எதிர்பார்க்கப்பட்டுள்ளது எனவும் அந்தப் பதிவில் மேலும் தெரிக்கப்பட்டுள்ளது. (வ-இ)


# கொழும்பு துறைமுகம் விரைவில் வழமைக்கு

கொழும்பு, நவ.17

கொழும்புத் துறைமுகத்தின் செயற்பாடுகள் இந்த வாரத்துக்குள் வழமைக்குத் திரும்பும் என துறைமுக அதிகார சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அதன் தலைவர் ஜெனரல் தயாரத்னாயக்க வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கொவிட் - 19 தொற்றின் காரணமாக அனைத்து நபர்களுக்கும், சமூகத்திற்கும் ஏற்படும் அழுத்தத்தைக் குறைக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கொழும்பு துறைமுகத்தில் ஜயபாகு முனையங்களில் பணியாற்றும் ஊழியர்களில் சுமார் 30 சதவீதமானோர் தொடர்ந்தும் தமது வீடுகளில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அத்தோடு துறைமுக வளவில் கொள்கலன் நடவடிக்கைக்காக பயிற்றுவிக்கப்பட்ட மனித வளம் போதுமான அளவில் இல்லாததால் மனித வளத்தை வழங்கும் நிறுவனத்தின் ஊடாக மேலதிக ஊழியர்களை இணைத்துக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் மூலம் துறைமுக நடவடிக்கைகள் வழமை நிலைமைக்கு திரும்பிக் கொண்டிருப்பதுடன் இந்த வாரத்துக்குள் கொழும்பு துறைமுகத்தில் அதன் வழமையான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்பதை எம்மால் உறுதிசெய்ய முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)



# இளைஞர்களுக்கு குறைந்த வட்டியுடன் கடன்; மத்திய வங்கியுடன் ஆலோசனை

கொழும்பு, நவ.17



சிறு தொழில் நிறுவனங்களைத் தொடங்க திட்ட மிட்டுள்ள இளைஞர்களுக்கு அரச வங்கிகள் மூலம் குறைந்த வட்டியுடன் வணிகக் கடன்களைப் பெற்றுக் கொடுப்பதற்கான சாத்தியப்பாடுகள் தொடர்பில் மத்திய வங்கியுடன் கலந்துரையாடி வருகின்றோம் என இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஆங்கில ஊடகமொன்றுக்கு அவர் தெரிவித்துள்ளதாவது, அண்மையில் வடக்குக்கு விஜயம் மேற்கொண்டபோது, வணிகக் கடன்களுக்கு விண்ணப்பிக்கும்போது தாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை இளைஞர்கள் தெரிவித்தனர். இந்நிலையில் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவு மூலம், இளைஞர்களுக்கு எவ்வித பிரச்சினைகளும் இன்றி நிதி உதவியைப் பெற உதவும் ஒரு கடன் திட்டத்தை வடிவமைக்க இலங்கை மத்திய வங்கியுடன் அமைச்சு கலந்துரையாடல்களைத் தொடங்கியுள்ளது. தற்போது, தனியார் மற்றும் அரச வங்கிகளில் இந்த கடன்களுக்கான வட்டி மிகவும் அதிகமானது. இது சிறு நிறுவன உரிமையாளர்களுக்கு செலுத்த முடியாமல் போகும். 2021 வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் சிறு தொழில் முயற்சி அபிவிருத்திக் கடன் திட்டத்தை நிறுவ அமைச்சு போதுமான நிதியை ஒதுக்குகிறது, இதனால் இளைஞர்களுக்கு இலகுவாக வணிக கடன்களைப் பெற்றுக்கொள்ள சந்தர்ப்பம் கிட்டும் - என்றார். (வ-இ)

# கோத்தாவின் சந்திப்புக்காக இறக்குமதியாளர் காத்திருப்பு

கொழும்பு, நவ.17

வாகன இறக்குமதித் தடையால் ஏற்பட்டுள்ள அந்நிய செலாவணி இழப்புத் தொடர்பில் இந்த மாத இறுதிக்குள் ஜனாதிபதியுடன் சந்தித்து கலந்துரையாடுவோம் என்ற நம்பிக்கை உள்ளது என வாகன இறக்குமதியாளர்கள் சங்கத் தலைவர் சிரிஷாந்த கமகே தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியைச் சந்தித்து வாகன இறக்குமதி தடை தொடர்பில் கலந்துரையாட கோரியுள்ள போதும் கொரோனாத் தொற்றால் அது தாமதமாகிவிட்டது.

நவம்பர் இறுதிக்குள் அவரை சந்திக்க முடியும் என நம்கின்றோம். வாகன இறக்குமதித் தடை மூலம் சுமார் 1 பில்லியன் ரூபா அந்நியச் செலாவணி சேமிக்கப்படும் என்று அதிகாரிகள் நம்புகின்றனர்.

ஆனால் உண்மையில், தடையின் நேரடி விளைவாக நாடு சுமார் 2 பில்லியனை இழந்து வருகிறது என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)

# காலாவதியான லைசன்ஸ்; மேலும் 3 மாதங்கள் சலுகை

கொழும்பு, நவ.17

செல்லுபடிக்காலம் முடிவடையும் சாரதி அனுமதிப்பத்திரங்களுக்கு மேலும் 3 மாதங்கள் சலுகை வழங்கப்பட்டுள்ளது என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

இதற்கமைய இந்த வருடம் டிசெம்பர் 31ஆம் திகதியுடன் காலாவதியாகும் சாரதி அனுமதிப்பத்திரங்களுக்கு இந்த சலுகைக் காலம் வழங்கப்பட்டுள்ளது.

ஆயினும் பிரதேச செயலகம் ஊடாக சாரதி அனுமதிப்பத்திரத்தை புதுப்பித்துக்கொள்ளலாம். பிரதேச செயலகங்கள் ஊடாக சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான ஒரு நாள் சேவை உள்ளிட்ட சேவை வசதிகளும் தற்போது வழங்கப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-இ)

# 2020ஐ விடவும் 2021 மோசமாகும்



**கொழும்பு, நவ. 17**
**2020ஆம் ஆண்டைவிடவும் 2021ஆம் ஆண்டு மோசமானதாக இருக்கும் என்று உலக உணவு நிறுவனத்தின் தலைவர் டேவிட் பேஸ்லி எச்சரித்துள்ளார்.**

அமெரிக்கா, ஐரோப்பா, பிரான்ஸ், இங்கிலாந்து, ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளில் கொரோனாவின் இரண்டாம் அலை தாக்கம் தொடர்ந்து வருகிறது.
உலக உணவுக் கழகத்துக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது. இந்த நோபல் பரிசு கிடைத்தமை யானது உலக நாடுகளை எச்சரிப்பதற்கு ஒரு வாய்பைத் தந்துள்ளது என உணவுக் கழகத்தின் தலைவர் டேவிட் பேஸ்லி குறிப்பிட்டுள்ளார்.
2021ஆம் ஆண்டில் மிகப்பெரிய அளவில் உலகில் பஞ்சம் ஏற்படும். அதனைச் சமாளிக்க பில்லியன் கணக்கான டொலர்களைச் செலவிட வேண்டிய சூழ்நிலை உருவாகும்.
உணவு மற்றும் வேளாண் அமைப்பின் ஆய்வின்படி, அடுத்த மூன்று முதல் ஆறு மாதங்களில் சுமார் 20 நாடுகள் அதிக கடுமையான உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்நோக்கவேண்டியிருக்கும், என்றார். (ஒ.இ)



## கட்டுநாயக்க புதிய முனையத்தின் கட்டட பணிகள் விரைவில் ஆரம்பம்

கொழும்பு, நவ.17
கட்டுநாயக்க சர்வதேச நிலையத்தில் பல அடுக்குகளைக் கொண்ட இரண்டாவது முனையத்தை நிர்மாணிக்கும் பணிகள் அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ளன.
கட்டுமானப் பணிகளை பிரதமர் மகிந்த ராஜபக்ச நாளை 18ஆம் திகதி உத்தியோகபூர்வமாக தொடக்கி வைக்கவுள்ளார். இந்த முனையத்தை நிர்மாணிக்க 107 பில்லியன் ரூபாவுக்கு மேலான தொகை செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.
ஜப்பான் முதலீட்டில் மேற்கொள்ளப்படவுள்ள இந்த முனையத்தை மூன்றாண்டுகளுக்குள் கட்டி முடிக்க திட்டமிடப்பட்டுள்ளமை குறிப்பிடப்பட்டுள்ளது. (வஇ)

## நிதி நெருக்கடியால் 560 பணியாளர்கள் சுயவிருப்பில் ஓய்வு

கொழும்பு, நவ.17
ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்தில் பணியாற்றும் 560 ஊழியர்கள் சுயவிருப்பின் அடிப்படையில் ஓய்வு பெறுவதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப் பட்டுள்ளது எனத் தெரியவருகிறது.
கொரோனாத் தொற்றால் விமான நிலையத்தை நீண்ட காலமாக மூடியதால் ஏற்பட்ட கடுமையான நிதி நெருக்கடியைச் சமாளிக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
அதன்படி, தானாக முன்வந்து ஓய்வு பெற விரும்பும் ஊழியர்களுக்கு இழப்பீடு செலுத்துவதற்கு ரூ. ஆயிரத்து 458 மில்லியன் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.
இதற்கான கடனை திருப்பிச் செலுத்த ரூ.1.5 பில்லியன் நீண்ட கால கடன் வசதியைப் பயன்படுத்தவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது எனவும் தெரியவருகிறது. (வ-இ)



## மன்னார் மாவட்டச் செயலர் நேற்றுக் காலை பதவியேற்பு

மன்னார், நவ. 17
மன்னார் மாவட்டத்தின் புதிய மாவட்டச் செயலராக நியமிக்கப்பட்ட திருமதி அன்னம்மா ஸ்ரான்லி டிமெல் நேற்று காலை கடமைகளைப் பொறுப்பேற்றார்.
மன்னார் மாவட்டத்தின் புதிய மாவட்டச் செயலராக நியமிக்கப்பட்ட திருமதி அன்னம்மா ஸ்ரான்லி டிமெலுக்கு மாவட்டச் செயலகத்தால் மிகச் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் பலர் கலந்து கொண்டிருந்தனர்.
நேற்றுக் கடமைகளைப் பொறுப்பேற்ற பின்னர் அவர் தெரிவித்ததாவது:
எனது சொந்த மாவட்டத்தில் மீண்டும் கடமையாற்ற எனக்கு வழி அமைத்த இறைவனுக்கு முதலில் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.
இந்த மாவட்டத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற நோக்குடன் என்னை மாவட்டச்செயலராக நியமித்த அனைத்து உயர் அதிகாரிகளுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். இந்த மாவட்டத்தின் சகல துறை சார் அனுபவங்களையும் கொண்டுள்ளேன் என்ற அடிப்படையில், இந்த மாவட்டத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, மாவட்டத்தில் நிலையான அபிவிருத்தியை ஏற்படுத்துவதோடு, இன மத நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதே எனது மிக முக்கிய நோக்கமாக உள்ளது.
நிச்சயமாக அனைவரது ஒத்துழைப்புடனும் என்னுடைய பதவிக் காலப் பகுதியில் மன்னார் மாவட்டம் முன் னேற்றம் அடையும் என்கின்ற மிகுந்த நம்பிக்கையைக் கொண்டுள்ளேன் என்று தெரிவித்தார். (ஓ.56)

## கொரோனாக் கட்டுப்படுத்தலில் சீனாவுக்கு அடுத்து இலங்கையே!



கொழும்பு, நவ.17
கொரோனாவைக் கட்டுப்படுத்துவதில் இலங்கையை விட ஒரு புள்ளியைப் பெற்றிருக்குமாயின் அது சீனா மாத்திரமே என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார். கொரோனாவின் மூன்றாவது அலை தற்போது முற்றாகக் கட்டுப்படுத்தப் பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட் டுள்ளார்.
ஹங்குராங்கெத்த பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.
மேலும் அவர் தெரிவித்ததாவது,
முதலாவது அலை ஏற்பட்ட போது கொரோனாவைக் கட்டுப்படுத்துவதில் சீனா மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் உலகில் முதலாம், இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டன. இலங்கையை விட ஒரு புள்ளியை அதிகமாகச் சீனா மாத்திரமே பெற்றுக்கொண்டது.
சீனாவுக்கு அடுத்ததாக இலங்கையே இருந்தது. முழு உலகமும் தோல்வியடையும்போது ஜனாதிபதி கோத்தபாயவின் தூரநோக்குப் பார்வை காரணமாக நாம் வெற்றியின் உச்சத்தில் இருந்தோம். கொரோனா வைரஸின் மூன்றாவது அலை தற்போது முற்றாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது-என்றார். (ற-இ)



### எரிப்பதா? புதைப்பதா?
## தீர்மானிக்க வேண்டியோர் சுகாதார அதிகாரிகளே

கொழும்பு, நவ.17
கொரோனா வைரஸால் உயிரிழந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்வது தொடர்பான தீர்மானத்தை எடுப்பதற்கான அதிகாரம் அமைச்சரவைக்கு இல்லை என அமைச்சர் ஹெகெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.
இது குறித்த முடிவை சுகாதார அதிகாரிகளே எடுக்கவேண்டும்.
அமைச்சரவையில் இந்த விடயம் குறித்து பல தடவை ஆராயப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-இ)

## பாடசாலைகள் ஆரம்பிப்பு இன்னமும் முடிவில்லை

கொழும்பு,நவ.17
பாடசாலைகளின் மூன்றாம் தவணைக்கான கற்றல் நடவடிக்கைகளை ஆரம்பிப்பது தொடர்பில், இதுவரையில் உரிய தீர்மானம் எடுக்கவில்லை என்று கல்வி சீர்திருத்தங்கள் மற்றும் தொலைதூரக் கல்வி இராஜாங்க அமைச்சின் செயலாளர் பேராசிரியர் உபாலி சேதர தெரிவித்துள்ளார்.
எதிர்வரும் 23 ஆம் திகதி மூன்றாம் தவணை பாடசாலைகள் ஆரம்பிப்பது தொடர்பில் முன்னர் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன.
மூன்றாம் தவணை ஆரம்பத்தின் போது, ஆரம்ப பாடசாலை மாணவர்களை முதலில் அழைப்பதற்கு கல்வி அமைச்சு அவதானம் செலுத்தியுள்ளது என்றும் அவர் குறிப்பிட் டுள்ளார். (க-இ)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## யாருக்கு பரீட்சை?

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் மின்னாமல், முழங்காமல் நேற்றிரவு திடீரென வெளியாகிவிட்டன. ஒருநாளுமில்லாத திருநாளாக இந்தமுறை 10 மாணவர்கள் 200 புள்ளிகளைப் பெற்று சாதனை படைத்துள்ளனர். அதைவிட வடக்கிலும் இம்முறையே அதிகளவு மாணவர்கள் வெட்டுப்புள்ளியை விடவும் அதிக புள்ளிகள் எடுத்து சித்தியடைந்துள்ளனர் என்று புள்ளிவிபரங்கள் சொல்கின்றன. ஆனாலும் இந்தப் பெறுபேறுகள் உண்மையிலேயே மாணவர்களுடையதா அல்லது பெற்றோருடையதா என்ற கேள்வி பலரிடம் இப்போதும் உண்டு.

என்னதான் தரம் 5 மாணவர்களுக்கான போட்டிப் பரீட்சை என்று புலமைப்பரிசில் பரீட்சை சொல்லப்பட்டாலும் கூட, மாணவர்களை விடவும் பெற்றோரே களத்தில் குதித்து கதகளி ஆடுவார்கள். தரம் 4 க்கு பிள்ளை வந்துவிட்டால் போதும். வீட்டில் புலமைப்பரிசில் கொடி ஏறிவிடும். அதற்குப் பின்னர் அந்தக் குழந்தையின் விளையாட்டு, பொழுதுபோக்கு, நண்பர்கள், தொலைக்காட்சி பார்த்தல் என எல்லாவற்றையும் பிடுங்கிக்கொண்டு, தனியே புத்தகம், கொப்பியோடுதான் திரிய வேண்டியிருக்கும். அதிகாலையிலேயே எழுந்து பிரத்தியேக வகுப்புக்குப் பிள்ளையை அழைத்துப் போய், பின்னர் அவசர அவசரமாக உணவைத் திணித்து பாடசாலைக்கு அனுப்பி, அங்கிருந்து வரும் பிள்ளையை ஒரு நொடிகூட ஓய்வெடுக்கமுடியாமல் ரியூசனுக்கு இழுத்துப் போய், அதுவும் முடிந்த பின்னர் பாடசாலை, தனியார் வகுப்புகளில் கற்றுக்கொண்டவற்றை இரைமீட்கச் செய்து, பரீட்சை முடியும் மட்டும் பெற்றோர் மடியில் நெருப்பைக் கட்டியிருப்பது போலவே அந்தரித்துக் கொண்டு திரிவார்கள்.

இதைவிட என்னென்ன மாதிரிப் பரீட்சை வினாத்தாள்கள் கிடைக்கின்றனவோ அவற்றையெல்லாம் ஒன்றுகூடத் தப்பவிடாமல், போட்டோக் கொப்பி எடுத்து இரவிலே பிள்ளையைக் கொண்டு செய்விப்பார்கள். போட்டோக் கொப்பிச் செலவு மட்டும் , இந்த இரு வருடத்திலும் ஒரு லட்சம் ரூபாவைத் தாண்டாமல் இராது. புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயாராகும் ஒரு மாணவனின் வீட்டுக்குச் சென்றால் அங்கு வீடு முழுதும் நிறைந்திருக்கும் கொப்பி புத்தகங்கள், கட்டுக் கட்டாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் பழைய மாதிரி வினாத்தாள்கள் என்பவற்றைப் பார்க்காமல் இருக்க முடியாது. இத்தனையும் வெறும் பத்தே வயது நிரம்பிய பாலகர்கள் கரைத்துக் குடிப்பதற்கான ஏற்பாடு. தங்கள் பிள்ளைகளை எப்படியெல்லாம் கசக்கிப் பிழிந்து, அவர்களின் கனவுகளைப் பிடுங்கி, தாங்கள் நினைத்தபடி புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயாராகும் இயந்திரங்களாக மாற்றுவதில் பெற்றோர் என்றுமே தயங்கியதில்லை. அதற்காக பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் திறனை குறைத்து மதிப்பிடவும் முடியாது.


இப்படி எதற்காகப் பிள்ளைகளைப் பெற்றோர் பிழிகிறார்கள்? எல்லாமே வறட்டுக் கௌரவமே. அடுத்தவர்களின் பிள்ளை 180 புள்ளிகள் எடுத்திருந்தால் தங்கள் பிள்ளை அதைவிடக் கூடுதலாகப் பெற வேண்டும், அப்போதுதான் ஊரில் தலை நிமிர்ந்து நடக்க முடியும் என்ற ஆபத்தான கருத்தியலின் விளைவாகவே பெற்றோர் இவ்விதம் பிள்ளைகளைப் பரீட்சைகளின் பேரால் பந்தயக் குதிரைகளாக்கி, வதைக்கிறார்கள். பாவம் பிள்ளைகள், விளையாடச் செல்லும் காலத்தில் தங்கள் துடுக்கடக்கி, ஆசைகளைத் தொலைத்து பெற்றோர் ஏவிய வழியில் நடந்து, பரீட்சைக்குத் தோற்றுகின்றனர். ஆகவேதான் இந்தப் பரீட்சை மாணவர்களின் உளநல்னைப் பெரிதும் பாதிப்பதாக சிறுவர் நலனில் அக்கறை கொண்ட பலரும் குரல் கொடுத்து வருகின்றனர். இதனையடுத்து கடந்த காலங்களில் புலமைப் பரிசில் பரீட்சையினை இல்லாமலாக்க எடுத்த முயற்சிகள் எதுவும் பலிக்கவில்லை. இருப்பினும் கடந்த அரசு புலமைப்பரிசில் பரீட்சைக்கு மாணவர்கள் கட்டாயமாகத் தோற்றத் தேவையில்லை என அறிவித்திருந்த போதும், அது நடைமுறைக்கு வராத ஒன்றாகவே இதுவரை இருக்கின்றது.

இதையெல்லாம் தாங்கி, இந்தச் சிறுவயதிலேயே படிப்பதற்காக எவ்வளவோ பாடுகளையெல்லாம் கடந்து, சாதித்த மாணவச் செல்வங்களைப் பாராட்டாமலும் இருக்கமுடியாதே.

புலமைப்பரிசில் பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் எடுத்த சகல மாணவச் செல்வங்களுக்கும் உதயனின் உளமார்ந்த வாழ்த்துக்கள். கூடவே இந்தப் பரீட்சையில் வெட்டுப்புள்ளியைத் தொடமுடியாமல் போன மாணவர்கள் இதனை ஒரு உந்துதலாகக் கொண்டு, இன்னும் கல்விக் கடலில் எதிர் நீச்சல் போட்டு வெல்லும் மனஓர்மத்தைப் பெற்றுச் சாதிக்கவும் வாழ்த்துகிறோம்.

# கொரோனா தடுப்பில் இலங்கை முன்னிலை

கொழும்பு,நவ.17



கொவிட்- 19 தொற்று நோயைக் கட்டுப்படுத்தும் முயற்சியில், இலங்கை அதிகாரிகள் எடுத்த நடவடிக்கைகள், வேறு சில நாடுகளுடன் ஒப்பிடுகையில், உயர்ந்த தரத்தில் உள்ளது என்று தலைமை தொற்று நோயியல் நிபுணர் மருத்துவர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

மக்களுக்கு நிவாரணம் வழங்குதல், வைரஸைக் கட்டுப்படுத்துதல் தொடர்பில் அரசு எடுத்த தீர்மானங்கள் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

"மக்களுக்கு இலவசமாக பி.சி.ஆர். பரிசோதனைகளைச் செய்ய அனுமதிப்பது, கொவிட்-19 நோயாளிகளுக்கு மருத்துவமனைகளில் இலவசமாக தங்குமிடத்தை வழங்குவது, அதிக ஆபத்துள்ள பிரதேசங்களை முடக்குவதற்கு உடனடி நடவடிக்கைகளை எடுப்பது, முடக்கப்பட்ட பகுதி மக்களுக்கு நிவாரணப் பொதிகளை வழங்குவது போன்ற நடவடிக்கைகளை அதிகாரிகள் விரைவாக எடுத்துள்ளனர்.

வரையறுக்கப்பட்ட வளங்களை உச்ச பட்சமாக பயன்படுத்துவ்தன் மூலம், அரசு நிலைமைகளை நன்கு கையாள்கிறது. வைரஸ் பரவுதலைக் கட்டுப்படுத்த பயனுள்ள நடவடிக்கைகளை எடுப்பதிலும், பாதிக்கப்பட்ட சமூகத்துக்கு சம்பந்தப்பட்ட வசதிகளை வழங்குவதிலும், சில நாடுகளில் அரசின் தலையீடு மிகவும் குறைவாகவே உள்ளது.

எவ்வாறாயினும், கொவிட் -19 தொற்றிலிருந்து நாடு பாதுகாப்பாக இருப்பதை உறுதி செய்வதில் இலங்கை அதிகாரிகள் முன்னணி வகிக்கின்றனர் - என்றார்.

(க-இ)

## பட்ஜெட் அமர்வில் பங்கேற்க மூவருக்கு அனுமதியில்லை

கொழும்பு,நவ.17

இன்று இடம்பெறவுள்ள வரவு செலவுத் திட்ட அமர்வில் பங்கேற்க, சிறையிலுள்ள மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்), ரிஷாட் பதியுதீன் மற்றும் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள பிரேமலால் ஜயசேகர ஆகிய மூவரையும், நாடாளுமன்ற அமர்வுக்கு அழைக்காமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகளில் கொரோனா வைரஸ் தொற்றுப்பரவி வரும் நிலையில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (க-இ)

## ஆளுங்கட்சியில் இருவருக்கு ஆசனம்

கொழும்பு,நவ.17

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான டயனா கமகே மற்றும் அரவிந்தகுமார் ஆகிய இருவருக்கும் நாடாளுமன்றத்தில், ஆளுங்கட்சியில் ஆசனங்களை ஒதுக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம், ஆளும் கட்சியின் பிரதம கொரடா அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னான்டோ முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை நாடாளுமன்றத்தின் பிரதான படைகள சேவிதர் நரேந்திர பெர்ணான்டோ தெரிவித்துள்ளார். (க-இ)

# தடுப்பூசி இறக்குமதிக்கு பின்னடிக்கின்றது அரசு

சஜித் குற்றச்சாட்டு

கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்த அமெரிக்க நிறுவனமான ஃபைசர் நிறுவனத்தால், வெற்றிகரமான முறையில் கண்டுபிடிக்கப்பட்ட, தடுப்பூசியை இறக்குமதி செய்ய அரசு இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றம் சாட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்த அமெரிக்க நிறுவனமான பைசர் மற்றொரு நிறுவனமும் வெற்றிகரமான தடுப்பூசியைக் கண்டுபிடித்துள்ளது என தகவல் வெளியாகியுள்ளது. இந்த நிலையில், 100 க்கு 90 வீதம் தொற்றைக் தடுக்ககூடிய தடுப்பூசியை அந்நாடு கண்டுபிடித்துள்ளது.

அந்தத் தடுப்பூசி குறித்து தற்போதைய அரசு என்ன தீர்மானம் எடுத்துள்ளது? இறக்குமதி செய்ய அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது? பைசர் நிறுவனத்தோடு ஏதாவது ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளதா? தடுப்பூசியை இறக்குமதி செய்து அதற்கு ஏற்ப வெப்பநிலையில் வைப்பதற்கு அரசு மற்றும் சுகாதாரப் பிரிவினர் ஏற்பாடு செய்துள்ளனரா? எனக்குத் தெரிந்த வரையில் எந்த நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளவில்லை.



நாங்கள் ஐக்கிய மக்கள் சக்தி என்ற வகையில் கழுகுப் பார்வையில் பார்த்துக் கொண்டிருக்கிறோம். தடுப்பூசியை இறக்குமதி செய்து, அதை இந்த நாட்டு மக்களுக்கு இலவசமாக வழங்க வேண்டும்.

கொரோனாத் தொற்றைத் தடுப்பதற்காக இறக்குமதி செய்யும் சகலதையும் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (க-இ)

## வடமாகாண மரநடுகை மாதம்

கார்த்திகை 2020

"பொருள்களின் உண்மையான இயல்புகளை நாம் சரியாகக் கருத்திற்கொண்டால் ஒவ்வொரு மரமும் தங்கத்தினாலோ வெள்ளியினாலோ ஆக்கப்பட்டிருப்பதை விட அது பச்சையாக இருப்பதே அதி உன்னதமானது". **மார்ட்டின் லூதர்**

## சந்நிதியில் பக்தர்கள் உள்நுழையத் தடை

வடமராட்சி, நவ.17

வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டைமனாறு செல்வச் சந்நிதி ஆலயத்துக்குள் பக்தர்கள் உள்நுழைவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

கந்தசஷ்டி விரதத்தின் ஆரம்ப நாளான நேற்றுமுன்தினம் பெருமளவான அடியார்கள் ஆலயத்துக்குச் சென்றிருந்தபோதும் வெளி வீதியில் வைத்தே சந்நிதியானை தரிசிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

அடியார்களில் ஐந்து நபர்கள் மாத்திரம் ஆலயத்துக்குள் உள்நுழைய அனுமதித்து, அவர்கள் வெளியில் வந்ததும் வேறு ஐந்து நபர்கள் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்றுக் காரணமாக சுகாதார திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கு அமைவாக இவ்வாறான நடைமுறை பின்பற்றப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

ஆலய வளாகத்தில் பொலிஸார் மற்றும் சுகாதார துறையினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-20)

கொரோனாவுக்கான

## போக்குவரத்து நடைமுறைகளை பின்பற்றாத பேருந்துகளுக்கு சிக்கல்



கொழும்பு, நவ. 17

அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட போக்குவரத்துக் கொள்கைக்கு அமைவாக செயற்படாத பேருந்துகள் குறித்து ஆராய சிறப்பு விசாரணைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

பேருந்தின் இருக்கைகளை விட அதிகமான பயணிகளை ஏற்றிச் செல்லுதல், நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை விட அதிக கட்டணம் வசூலித்தல், டிக்கெட் வழங்காமை உள்ளிட்ட பல்வேறு மோசடி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அனைத்து அரச மற்றும் தனியார் போக்குவரத்து பேருந்துகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படவுள்ளது.

இவ்வாறான பேருந்துகள் தொடர்பில் 1955 என்ற இலக்கத்துக்கு பொதுமக்கள் முறைப்பாடுகளை முன்வைக்க முடியும் என்றும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ஒ-இ)

யாழ்.போதனாவில்

# நோயாளர்களைப் பார்வையிட 'பாஸ்' நடைமுறை இறுக்கம்



கொடிகாமம், நவ, 17

**யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளர்களைப் பார்வையிட வருவோர் பாஸ் நடைமுறைகளைப் பின்பற்றுமாறு மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.**

பாஸ் இல்லாமல் நோயாளர்களைப் பார்வையிட வந்தோர் மருத்துவமனைக்கு வெளியில் பல மணிநேரம் காத்து நின்ற சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது

இது தொடர்பாக நோயாளர்களை பார்வையிட வந்தோர் கருத்து தெரிவித்ததாவது:

முன்னர் நோயாளர்களை பார்வையிட பாஸ் வைத்திருப்போரை அனுமதித்த பின்னர் பாஸ் இல்லாதவர்களையும் குறிப்பிடப்பட்ட நேரத்துக்கு பின்னர் அனுமதிக்கும் வழமை காணப்பட்டது.

தற்போது அந்த நடைமுறை யில்லை எனத் தெரிவிக்கும் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், தூர இடங்களில் இருந்து வந்து நோயாளருடன் தங்கியிருந்த உறவினர் வீடு சென்றதால் தம்மால் உரிய அனுமதி அட்டையை (பாஸ்) பெற முடியாமல் போய் விட்டது எனவும், இதே வேளை தூர இடங்களில் இருந்து வரும் தங்களை பாதுகாப்புக் கடமையில் உள்ள சில ஊழியர்கள் மரியாதை இன்றி தரக்குறைவாக பேசுவதாகவும் தெரிவித்தனர்

இந்த விடயம் தொடர்பில் மருத்துவமனைப் பணிப்பாளரை தொடர்பு கொண்டு கேட்டபோது;

கொரோனா சூழ்நிலை காரணமாக நோயாளர்களைப் பார்வையிடுவோரை மட்டுப்படுத்துவதற்காக பாஸ் நடைமுறை இறுக்கமாக பார்க்கப்படுகிறது. இதற்கு ஏற்ற வகையில் நோயாளர்களை பார்வையிட வருவோர் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனத் தெரிவித்தார். (ஐ-159)



## குருதித்தானம்

சாவகச்சேரி, நவ. 17

தென்மராட்சி பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் குருதிக்கொடை முகாம் நேற்று இடம்பெற்றது.

இதில் பெருமளவு அலுவலர்களும், பொதுமக்களும் பங்குபற்றி குருதித்தானம் செய்தனர்.

யாழ்.போதனா மருத்துவமனையில் குருதிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், குருதிக் கொடையாளர்களை குருதி வழங்குமாறு மருத்துவமனையினர் விடுத்த வேண்டுகோளையடுத்து, பிரதேச செயலக அலுவலர்கள் குருதித்தானம் வழ்ங்கினர். (க-9)

## கைதிகளுக்கு சிகிச்சை மருத்துவமனை தயார்!



கொழும்பு, நவ. 17

கொரோனாத் தொற்றுக்குள்ளாகும் கைதிகளுக்கு சிகிச்சையளிப்பதற்காக, சில மருத்துவமனைகள் ஒதுக்கப்பட்டுள்ளன என சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, பொலநறுவை, கல்லேல்ல, கந்தகாடு மற்றும் வெலிகந்த ஆகிய பிரதேசங்களிலுள்ள மருத்துவமனைகள் ஒதுக்கப்பட்டுள்ளன என சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சுதர்சனி பெர்ணான்டோபுள்ளே தெரிவித்துள்ளார். (ஒ-இ)



## தனங்களப்பு வெளியில் பனம் விதைகள் நடுகை

கிளிநொச்சி, நவ.17

'கிளிநொச்சி மக்கள் பேரவை' அமைப்பின் ஏற்பாட்டில், தனங்களப்பு வெளியில் பத்தாயிரம் வரையிலான பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டன.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் சத்தியமூர்த்தி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், பனை அபிவிருத்திச் சபையின் பொது முகாமையாளர் எம்.பி.லோகநாதன், சபையின் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர்.சசிக்குமார் ஆகியோர் விதைகளை நடுகை செய்தனர்.

வடக்கு மாகாணத்தில் ஒரு மில்லியன் பனம் விதைகளை நடுகை செய்யும் வேலைத்திட்டத்துக்கு அமைவாக தனங்களப்பில் 10 ஆயிரம் விதைகள் நடுகை செய்யப்பட்டன. (க-17)

## கூட்டுறவாளர்களுக்கு தென்னங்கன்றுகள்

யாழ்ப்பாணம், நவ.17

மர நடுகை மாதத்தை முன்னிட்டு பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்கள் மற்றும் அங்கத்தவர்களுக்கு தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டன.

வலிகாமம் கொத்தணிக்கு உட்பட்ட சங்கங்களைச் சேர்ந்த 60 க்கும் மேற்பட்ட அங்கத்தவர்கள் மற்றும் பணியாளர்களுக்கு கன்றுகள் வழங்கப்பட்டன என்று கொத்தணியின் தலைவர் எஸ்.செல்வராசா தெரிவித்தார்.

இதனைவிட யாழ்.குடாநாட்டில் உள்ள ஏனைய பனை, தென்னை வள கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களுக்கும் பயன்தரும் மரக்கன்றுகளை வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (க-17)

# பருவ மழையால் கள் உற்பத்தி பாதிப்பு

யாழ்ப்பாணம், நவ.17
தற்போது பெய்து வரும் பருவப்பெயர்ச்சி மழையால், கள் உற்பத்தி வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது.
இதனால் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளது.
சீவல் தொழிலாளர்களின் நாளாந்த தொழில் வளம் பாதிக்கப்பட்டுள்ளதால், அவர்களுக்கு உலருணவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று வலிகாமம் கொத்தணியின் தலைவர் எஸ்.செல்வராசா தெரிவித்துள்ளார்.
கொரோனாத் தாக்கத்தின்போது நாடு முடக்கப்பட்டபோது, கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்கள் பணியாளர்களுக்கு, சங்கங்களால் நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டன.
தற்போது பருவப் பெயர்ச்சி மழையால் சீவல் தொழிலாளர்கள் வாழ்வாதார ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.
அதற்கமைவாக பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (சு-இ)

# நிவாரணப் பணத்தில் அரசியல் எதிர்க்கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 17
கொரோனா பரவலைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் செயற்பட்டு வரும் சுகாதாரப் பிரிவினரைத் தங்களுக்கு ஏற்றவாறு இடமாற்றம் செய்துவரும் அரசு, மக்களுக்கு நிவாரணம் வழங்க ஒதுக்கப்பட்ட ரூ 5 ஆயிரத்திலும் தங்களது அரசியலைச் செய்கின்றது. இவ்வாறு எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கின்ஸ் நெல்சன் குற்றம் சுமத்தியுள்ளார்.
எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
கொரோனா முதலாம் அலையை சுகாதார பிரிவினர், பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் இணைந்து சிறந்த முறையில் கட்டுப்படுத்தியிருந்தனர். அப்போதைய சுகாதார பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்கவும் சிறந்த முறையில் தனது செயற்பாடுகளை முன்னெடுத்திருந்தார்.
அரசு அவரை இந்த பதவியிலிருந்து மாற்றியுள்ளது. அவருக்கு பதவி உயர்வு வழங்கியதாகவும் அரசு குறிப்பிட்டுள்ளது. அவருக்கு பதவி உயர்வு வழங்குவதாயின் சுகாதாரப் பிரிவில் வழங்கப்பட்டிருக்க வேண்டும். எனினும் சுற்றாடல் துறைக்கே அவர் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.
இதேவேளை, சுகாதார அமைச்சின் ஊடகப் பேச்சாளராக நியமிக்கப்பட்ட ஜயருவன் பண்டாரவையும் தற்போது சுகாதார அமைச்சர் இந்த பதவியிலிருந்து நீக்கியுள்ளார். அரசு தனது தனிப்பட்ட விருப்பத்தில் இவ்வாறான முடிவுகளை எடுத்து வருகின்றது.
5 ஆயிரம் ரூபா நிவாரணப் பணம் வழங்கும்போதும் கிராம அலுவலர்கள் மற்றும் அரச ஊழியர்கள் சிறந்தமுறையில் அவற்றை வழங்கி வந்தனர். இந்த செயற்பாடுகளிலே பிரதேச சபை உறுப்பினர்கள் தேவையற்ற முறையில் தலையிட்டதன் காரணமாக அதில் குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன, -என்றார். (ஒ-இ)

# மீண்டுமொரு இனமுறுகல் தோன்றாதவாறு அரசமைப்பு

## கோருகின்கிறது பவ்ரல்

PAFFREL

**கொழும்பு, நவ. 17**
**இந்த நாட்டில் மீண்டும் ஒரு இனமுறுகல், போர் தோன்றாதவாறு, மீண்டும் மீண்டும் அரசமைப்பு திருத்தப்படாதவாறு புதிய அரசமைப்பு அமையவேண்டும்.**

இவ்வாறு பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.
புதிய அரசமைப்பு தொடர்பான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கான ஆணைக்குழுவின் செயலருக்கு பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப்பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி அனுப்பிவைத்திருக்கும் கடிதத்திலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.
கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
கடந்த 42 ஆண்டுகளில் 20 தடவைகள் திருத்தம் செய்யப்பட்ட அரசமைப்புக்குப் பதிலாக அனைவருக்கும் பொருத்தமானதும் நீண்டகால நோக்கிலானதுமான புதிய அரசமைப்பை உருவாக்குவதே எமது அபிப்பிராயம்.
புதிய அரசமைப்பை தயாரிக்கும்போது ஒவ்வொரு கட்சிகளுக்குமான அரசியல் அபிலாசைகளைக் கைவிட்டு, நாட்டில் தற்போது காணப்படும் அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணக்கூடிய வகையில் நீண்டகால அடிப்படையில் மக்களை முன்னிறுத்தி அதனைத் தயாரிப்பது அவசியமாகும்.
இலங்கை இனரீதியான இளைஞர் எழுச்சியையும் சுமார் மூன்று தசாப்தகால போரையும் எதிர்கொண்ட நாடாகும். எதிர்காலத்தில் அவ்வாறான பிரச்சினைகள் ஏற்படாதவாறு, அனைத்து இனங்களின் உரிமைகளையும் உறுதிசெய்யும் வகையில் புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.
தற்போதைய கொரோனா நெருக்கடி நிலையில் மக்களின் ஒட்டுமொத்த அவதானமும் அதிலேயே குவிந்திருக்கிறது. ஆகவே புதிய அரசமைப்புத் தொடர்பில் மக்களிடம் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வது குறித்துத் தெளிவுபடுத்தல் மற்றும் விழிப்புணர்வூட்டல் செயற்றிட்டமொன்றை முன்னெடுக்குமாறும் ஆலோசனை வழங்குகின்றோம், -என்றுள்ளது. (ஒ-இ)


# கொரோனா வைரஸுக்கு 3 நாள்கள் வரை ஆயுள்



கொழும்பு,நவ.17
கொரோனா வைரஸ் மூன்று நாள்கள் வரை மேற்பரப்பில் உயிருடன் இருக்கும். அதனால் மனிதர்கள் மத்தியில் மிக விரைவாகப் பரவும் பெரிய ஆபத்து உள்ளது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் விசேட மருத்துவ நிபுணர் அனுருத்த பாதெனிய தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,
வேறு வைரஸ் கிருமிகளைப் போல் அல்லாது கொரோனா வைரஸ், மூன்றுநாள்கள் மேற்பரப்பில் உயிருடன் இருக்கும் என்பது மிகவும் பயங்கரமான நிலைமை.
இதன் காரணமாக அலுவலகங்கள், பொதுப் போக்குவரத்து வாகனங்கள் மட்டுமல்லாது, வீடுகளை விட்டு வெளியில் இருக்கும்போது, பொருள்களைத் தொடுவது மற்றும் நபர்களுடன் நெருக்கமாக இருப்பதைக் குறைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.
சவர்க்காரம் அல்லது கிருமித் தொற்று நீக்கித் திரவங்களைப் பயன்படுத்தி, அவ்வப்போது கைகளைக் கழுவுவதன் மூலம் தொற்றிலிருந்து தப்பிக்க முடியும்.
கொரோனா வைரஸ் தண்ணீர் மற்றும் மனித கழிவுகள் மூலம் மனிதர்களின் உடல்களுக்குச் செல்லும் ஆபத்து இருப்பது தொடர்பில், எந்த ஆய்வுகளிலும் இது வரை உறுதிப்படுத்தப் படவில்லை. உலக சுகாதார அமைப்பும் இதனை உறுதிப்படுத்தியுள்ளது. -என்றார். (சு-இ)

# பதவியேற்று ஓராண்டு நிறைவு கொண்டாட்டங்கள் வேண்டாம்

## கோத்தா வேண்டுகோள்



கொழும்பு, நவ. 17
ஜனாதிபதியாக பதவி ஏற்று ஓராண்டு பூர்த்தியாகும் நிலையில் அது தொடர்பான விழாக்கள் எதனையும் நடாத்த வேண்டாம் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அறிவித்துள்ளார்.
ஜனாதிபதியாக கோத்தாபய ராஜபக்ச பதவியேற்று நாளையுடன் ஓராண்டு பூர்த்தியாகின்றது.
தமக்கு வாழ்த்து தெரிவிக்க விரும்புவோர் எவ்வித நிகழ்வுகளையும் செய்ய வேண்டாம் எனவும் வீண் செலவுகளைச் செய்ய வேண்டாம் எனவும் ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார். (ஒ-இ)

# சாட்டி அண்ணமார் வீதி புனரமைப்பு

யாழ்ப்பாணம்,நவ.17
வேலணை பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட சாட்டி அண்ணமார் இணைப்பு வீதி, ஊரியிட்டு செப்பனிடப்பட்டுள்ளது.
இந்த வீதி நீண்டகாலமாகச் செப்பனிடப்படவில்லை. இதனால் மக்கள் போக்குவரத்தில் பெரும் அசௌகரியங்களை நாளாந்தம் எதிர்கொண்டு வந்தனர்.
சப்ரிகம திட்டத்தினூடாக 5 இலட்சமும், பிரதேச சபையின் இரு உறுப்பினர்களது ஒதுக்கீட்டிலிருந்து 5 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டு, சுமார் 10 இலட்சம் ரூபா செலவில் ஊரியிடப்பட்டு வீதி செப்பனிடப்பட்டுள்ளது. (சு-இ)

# இந்த அரசுக்கு திறமையில்லை

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு,நவ.17

**இந்த அரசு பதவியேற்று ஒரு வருடமாகியுள்ள நிலையில், முற்றாகத் தோல்வியடைந்துள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.**



ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்ததாவது,

இந்த அரசின் திறைமையின்மையால் மக்கள் மீது கடும் சுமைகள் சுமத்தப்பட்டுள்ளன.

தற்போது நாட்டின் சில பகுதிகள் முற்றாக முடக்கப்பட்டுள்ளன. மக்கள் வீட்டிலிருந்து வெளியேவருவதற்கு அச்சப்படுகின்றனர். போக்குவரத்து முறை சீர்குலைந்துள்ளது. பொருளாதாரம் பலவீனமாகியுள்ளது. அதே வேளை கல்வித்துறை, விவசாயத் துறை கடும் பாதிப்படைந்துள்ளன.

அரசு தற்போதைய நெருக்கடிகளில் இருந்து மீள்வதற்கு விஞ்ஞானத்தை நம்புவதற்கு பதில், புராண நம்பிக்கைகளை நம்புகின்றது.

அரிசியைக் கொள்வனவுசெய்ய முடியாத நிலையில் உள்ளதால், ஒரு வருடப்பூர்த்தியை பாற்சோறு உண்டு கொண்டாட முடியாத நிலையில் உள்ளது. அது இந்த அரசின் நிலைமை. என்றார். (க-இ)

## எரானுக்கு சி.ஐ.டி. அழைப்பு

கொழும்பு,நவ.17

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சூத்திரதாரி ஸஹ்ரான் காசிமின் மனைவியின் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தமைக்காக, நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரட்னவை பொலிஸார் விசாரணைக்கு அழைத்துள்ளனர்.

ஐக்கிய மக்கள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்சா டி சில்வா இதனை தனது டுவிட்டரில் பதிவிட்டுள்ளார். அவரிடம் விசாரணை செய்ய என்னவுள்ளது. அவரது வேண்டுகோளை நடைமுறைப்படுத்தினால் போதும் எனவும் அவர் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார். (க-இ)

## சேமிப்புப் பணத்தில் மாணவர்களுக்கு உதவி

சாவகச்சேரி,நவ.17

தென்மராட்சி பிரதேச சமுர்த்தி அலுவலர்களால், புகைத்தலுக்கு எதிரான கொடி வாரத்தில் சேகரிக்கப்பட்ட பணத்தில் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அந்தந்த சமுர்த்தி வலய வங்கிப் பிரிவுக்கு உட்பட்ட மாணவர்களுக்கு, தலா ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்படும்.

கைதடி வலயப்பகுதியில், 15 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 225 மாணவர்களுக்கு கடந்த வெள்ளிக்கிழமை உபகரணங்கள் வழங்கப்பட்டன.

ஏனைய சமுர்த்தி வலயங்களில் கொடிகாமம், கைதடி, சாவகச்சேரி போன்ற பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு, விரைவில் வலய ரீதியாக கற்றல் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன. (க-9)

## சிறந்த விவசாயிகள் 4 பிரிவுகளில் போட்டி

யாழ்ப்பாணம்,நவ.17

வடமாகாண விவசாயத் திணைக்களத்தின், யாழ்ப்பாண மாவட்ட அலுவலகத்தால், 2020 ஆம் ஆண்டுக்கான சிறந்த விவசாயிகள் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

நான்கு பிரிவுகளின் அடிப்படையில் யாழ். மாவட்டச் செய்கையாளர்களிடையே போட்டிகள் நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

சிறந்த வீட்டுத்தோட்டச் செய்கையாளர்கள், சிறந்த சேதன விவசாயச் செய்கையாளர்கள், சிறந்த விவசாயச் செயன்முறைத் தொழில் நுட்பங்களை நடைமுறைப்படுத்துபவர், சிறந்த காளான் செய்கையாளர் என்ற பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்படும்.

போட்டியில் பங்குகொள்ள விரும்பும் போட்டியாளர்கள் தங்கள் பகுதியிலுள்ள விவசாயப் போதனாசிரியர் அலுவலகத்தில், போட்டிக்கான விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் விவசாயப் போதனாசிரியருக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கலாம். அல்லது மாவட்டக் காரியாலயத்தில் சமர்ப்பிக்க முடியும். கடித உறையின் இடது பக்க மேற்பக்கத்தில் 'சிறந்த விவசாயிகள் தெரிவு - 2020' எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

விவசாயத் திணைக்களத்தால் கடந்த காலங்களில் மாவட்ட மட்டத்தில் கௌரவிக்கப்பட்டவர்கள், ஏனைய செய்கையாளர்களுக்கும் சந்தர்ப்பம் அளிக்கும் வகையில் இந்தப் போட்டியில் கலந்துகொள்ளவதைத் தவிர்க்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

மேலதிக தொடர்புகளுக்கு 0212222175, 0773051363, 0776913456 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறு, பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் திருமதி.அ.சிறிரங்கன் அறிவித்துள்ளார். (க-இ)

## தென்மராட்சி வலயத்துக்கு புதிய அதிபர்கள் நியமனம்

சாவகச்சேரி, நவ.17

தென்மராட்சி கல்வி வலயத்தில் வெற்றிடமாக காணப்பட்ட அதிபர் பதவிகளுக்கு, புதிய அதிபர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர்.

கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலைக்கு கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றிய க.மகிந்தனும், எழுதுமட்டுவாழ் கரம்பகம் அ.த.க. பாடசாலைக்கு, கொடிகாமம் எருவன் கணபதிப்பிள்ளை வித்தியாலய அதிபராகக் கடமையாற்றிய திருமதி வ.கபிரியேற்பிள்ளையும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை அதிபர் திருமதி - பு. மங்களேஸ்வரன் ஓய்வுபெற்றார். கரம்பகம் அ.த.க.பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றிய திருமதி அ.தர்மினி, மட்டுவில் வடக்கு அ.த.க.பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றார்.

அதனையடுத்து அந்த வெற்றிடங்களுக்கு தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தால் விண்ணப்பங்கள் கோரப்பட்டன. விண்ணப்பித்தவர்களுக்கு நேர்முகத் தேர்வு நடாத்தி, மாகாண கல்வித் திணைக்களத்துக்கு விபரங்கள் அனுப்பப்பட்டதை அடுத்து புதிய அதிபர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். (க-9)



கொமர்ஷல் வங்கியின் சாவகச்சேரி கிளையில், கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக கிளை முகாமையாளராக கடமையாற்றிய. சி.சிவரூபன், யாழ்.திருநெல்வேலி கிளைக்கு இடமாற்றப்பட்டுள்ளார். அவருக்கு அலுவலர்களால் பிரிவுபசார விழா நடாத்தப்பட்டது. (க-9)

## 707 பொலிஸாருக்கு கொரோனாத் தொற்று

கொழும்பு,நவ.17



707 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு கொவிட்-19 தொற்று ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொற்றுக்கு இலக்கான பொலிஸ் உத்தியோகத்தர்களில் 145 பேர் விசேட அதிரடிப்படையைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதுவரையில் 707 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கொவிட்-19 தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களில் பலர் குணமடைந்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (க-இ)

## மோதலில் இருவர் காயம்

சாவகச்சேரி,நவ.17

மோதல் சம்பவங்களில், வெட்டுக்காயங்களுக்கு இலக்கான இருவர் மேலதிக சிகிச்சைக்காக, யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

தீபாவளியன்று மிருசுவில் தவசிகுளத்தில் இடம்பெற்ற சம்பவத்தில் மூவரும், நாவற்குழியில் இடம்பெற்ற சம்பவத்தில் ஒருவரும் காயமடைந்தனர். அவர்கள் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இவர்களில் தவசிகுளத்தைச் சேர்ந்த 17 வயது சிறுவனும் நாவற்குழியைச் சேர்ந்த 31 வயது குடும்பஸ்தரும் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (க-9)

## பளை நகரில் மர நடுகை

பளை,நவ.17

வடமாகாண மர நடுகை வாரத்தை முன்னிட்டு, பச்சிலைப்பள்ளி பிரதேச சபையால், பளை நகரில் மரக்கன்றுகள் நடப்பட்டன.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர், உப தவிசாளர் மற்றும் பிரதேச செயலாளர், மற்று சபை உறுப்பினர்கள், ஊழியர்கள் இணைந்து கன்றுகளை நடுகை செய்தனர்.

5 ஆயிரம் மரக்கன்றுகள் நடுகை செயற்றிட்டத்தின் முதற்கட்டமாக நேற்று மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டன. (க-113)



# தரம் 5 புலமைப்பரீட்சை பெறுபேறுகள்

**நேற்றுமுன்தினம் வெளியான 2020 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைகளில் பாடசாலைகள் பெற்றுக் கொண்ட சித்தி விவரங்கள்:**

### வவுனியா பாவற்குளம் கணேசுவரா மகா வித்தியாலயம்

நேற்றுமுன்தினம் வெளியான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வவுனியா பாவற்குளம் கணேசுவரா மகா வித்தியாலயத்தில் நான்கு மாணவர்கள் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளனர்.
சி.அட்சயா - 182, த.வர்சினி-175, வி.சோபிகன் - 173, த.கொன்சிகா-165 ஆகிய மாணவர்களே வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றுள்ளனர். (ஐ)

### யாழ்.வண்ணை நாவலர் மகா வித்தியாலயம்

வெளியான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ்ப்பாணம் வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தை சேர்ந்த மூன்று மாணவர்கள் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்று சித்தி பெற்றுள்ளனர்.
வ.கபில்ராஜ் -170, கோ.ஹரிகரன்-163, ஜெ. செமீரா -161 ஆகிய மாணவர்களே சித்தி பெற்றுள்ளனர்.
பாடசாலையில் இருந்து 15 மாணவர்கள் தோற்றிய நிலையில் 7 பேர் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தி பெற்றுள்ளனர். (ஐ)

### புங்குடுதீவு ஸ்ரீகணேசா மகா வித்தியாலயம்

தரம் 5 புலமைப் பரீட்சையில் புங்குடுதீவு ஸ்ரீ கணேசா பாடசாலையில் மு.கவிசன் எனும் மாணவன்-163 புள்ளிகளைப் பெற்று சித்திய டைந்துள்ளார். பாடசாலையில் 14 மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர்.

### யா/ வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம்

வெளியான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ்ப்பாணம் வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்தில் இரு மாணவர்கள் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளனர்.
குகதீஸ்வரன் ரம்மியா-171, கங்கை அமரன் சர் மிதா-162 ஆகிய மாணவர்களே சித்திபெற்றுள்ள னர். (ஐ-70)

### யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை

வெளியான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலையில் சந்திரகுமார் ஆர்வலன் என்ற மாணவன் 195 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.
பாடசாலையில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய 232 மாணவர்களில் 144 மாணவர்கள் வெட் டுப்புள்ளிக்கு மேல் பெற்றுள்ளனர்.

### யாழ்ப்பாணம் வதிரி திரு இருதயக் கல்லூரி

வெளியான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ்ப்பாணம் வதிரி திரு இருதயக் கல்லூரியில் 4 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்திபெற்றுள்ளனர்.
எஸ்.பிரணவன்-179, பி.ஐஸ்வரன்- 174, ரி. அப்ஷிகா- 169, ஈ.[illegible] - 162 ஆகிய மாணவர்கள் சித்திபெற்றுள்ளனர்.
பரீட்சைக்குத் தோற்றிய 25 மாணவர்களில் 19 பேர் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர்.

### காரைநகர் வலந்தலை தெற்கு அ.மி.த.க.பாடசாலை

வெளியான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் காரைநகர் வலந்தலை தெற்கு அ.மி.த.க. பாட சாலையில் 8 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக ளுக்கு மேல் பெற்று சித்திபெற்றுள்ளனர்.
பரமேஸ்வரன் சுஜாதா-187,கிருஷ்ணகுமார் தேனுஜா-181, பாரதி கவிநயா-177, சிவரஞ்சன் நிதிசன்-177, ரவிச்சந்திரன் கலைநிலவன் -175, யோகலிங்கம் கல்யாணி -171, குமரசேகரம் அஷ் வின்-167,கணேசமூர்த்தி தனுஜா-163 ஆகி யோரே சித்தி பெற்றுள்ளனர்.
பாடசாலையில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய 25 மாணவர்களில் 12 மாணவர்கள் 100 புள் ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர். (ஐ-250)

### சங்கானை சிவப்பிரகாச இந்து ஆரம்ப பாடசாலை

வெளியாகிய தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சங்கானை சிவப்பிரகாச இந்து ஆரம்ப பாடசா லையில் 4 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்திபெற்றுள்ளனர்.
ம.லினாஸ் -179, கே.அபிநயன்-168, ரா.நிரு சன்-169, அருஸ்ணயா- 165 ஆகியோர் சித்தி பெற்றுள்ளனர்.
பாடசாலையில் 100 புள்ளிகளுக்கு மேல் 22 மாணவர்கள் பெற்றுள்ளனர்.

### யாழ். புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

வெளியான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ்ப்பாணம் புனித ஜோன் பொஸ்கோ வித்தி யாலயத்தில் இம்முறை அதிகமான மாணவர்கள் சித்திபெற்றுள்ளனர்.
பாடசாலையில் இருந்து இம்முறை 228 மாண வர்கள் பரீட்சைக்குத் தோற்றிய நிலையில் 159 மாணவர்கள் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்திபெற்றுள்ளனர்.
பாடசாலையின் கடந்த கால சித்திகளுடன் ஒப்பி டும் போது இம்முறை வரலாற்றில் அதி உயர் சித்தியாக 70 வீதம் பதிவாகியுள்ளது.
அஞ்ஜிதன் அஜினி என்ற மாணவி 195 புள்ளி களைப் பெற்று பாடசாலையில் முதலிடத்தில் உள்ளார்.

### யாழ்ப்பாணம் மகாஜனக் கல்லூரி

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ்ப்பா ணம் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவி சுபாஸ்கரன் ஜனுஸ்கா-198 புள்ளிகளைப் பெற்று யாழ்ப்பாண மாவட்டத் துக்கு பெருமை சேர்த்துள்ளார்.
பரீட்சையில் பாடசாலையில் 36 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந் துள்ளனர்.
சு.யனுஸ்கா - 198, கி.கோபிசா - 193, உ.வாசனா - 190, பி.யர்சனன்- 188, ச.அதிஸ்ரா - 185, ர.ஸ்ரீராம் - 183, ச.மகிழாசினி- 183, கே.யதுர் சிகா -181, வி.டிசானி - 181, த.விஸ்ணவி - 181, க.துசானன் - 180, தி.தயுஸ்ரன் - 179, வி.தஸ் மிகா - 179, தா.அபிராமி - 179, கு.யனுசா - 178, ர.கசன்றா - 178, க.குருஷோத்மன் - 177, செ.மோகிஷா - 176, நி.கவிசன்- 175, எ.மதுரா- 175, றொ.பிறின்சன்- 174, ர.திருஸ்ரிகா- 174, சு.கலைவாணன் - 173, பி.தர்சன்- 173, ப.ஜது ஷிகா - 171, ஜெ.யோகிதா - 168, மோ.அபிசன் - 167, த.கோகுலயா - 167, சி.சதுமி- 164, சு.தர [illegible] - 163, [illegible]வர்ணன் - 162, சி.சிவாட்சரன் -162, சி.சிபிஜா -161, க.தஸ்மிகா- 160, ம.சஸ் மிதா- 160 ஆகியோர் சித்தி பெற்றுள்ளனர்.

### யாழ்.வதிரி வடக்கு மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ்ப்பா ணம் வதிரி வடக்கு மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் 5 மாணவர்கள் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்று சித்திபெற்றுள்ளனர்.
எம்.வாகினி -174, பி. தனுஷன் -167,எஸ். நிபேதா -162, கே.அபிஷாந் -161,எம்.மேனுஜா - 160 ஆகியோர் சித்திபெற்றுள்ளனர்.
பாடசாலையில் பரீட்சையில் தோற்றி மாணவர்க ளில் 12 மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர்.

### அளவெட்டி அருணோதயக் கல்லூரி

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ்ப்பா ணம் அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் 39 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்திபெற்றுள்ளனர்.
பி. லிவின்சிகா-195, இ. ஆருயன்-192, த.தரு பன்- 189, ச.மதுவந்தி-189, ஸி.பவநிலா-188, கா.மதுமிதா- 187, சோ.அஸ்வின்-187, நா. திலக்ஷ்னா-186, து .ரோஜிதா185, கி. மகிர்தா- 184, சு.அக்ஷயா-184, சி. பபிதான்-184, கெ. சதுர்சன்-183, சு. நிருசனா-183, வி. ஜெயாஜினி -183,கோ. தேரிசிகா- 182, ச. சோமிலன்- 181,கி. திருசிகன்-180,ய. கிருஷிகன் -178,கோ.ரேம்சன் -178, சு. கிரேயன்-178,
நா. ஆர்த்திகன்- 177, சி. கபிசன்- 176, ரா. ஜிரு ஷன்-176, சி. அர்ஜுனா-175, சு. பரணிகா-174, ர. குகன்- 173, ம. சர்மதன்- 171, சு. நிதுசயன்-170, பி. தக்சலன்- 169, ம. மதுமிதா-169, செ. திசானா -166, வி. மிதுரன்-166, க.சானுகா -165, ஸ்ரீ. சர பிரியன்-165, சி. மபிசா -162, சு. தூசாந்- 161, அ. விபுசனா-161, தி. டேனுசன்- 160 ஆகியோர் சித்திபெற்றுள்ளனர். (ஐ-63)

### கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலை

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலையில் 16 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்திபெற்றுள்ளனர்.
இ.திதுசன்- 191, ச.ஜர்மிலன் -180, சு.சுஜீவனா -173, எஸ். தேனுஜா -172 ,தெ.அனுஸ்ராயினி -171, வ.வர்மிகன் -171, பி.ஆன்சல்மியா -170, லி. டோனிகா- 167,கெ.சபினா- 167, கா.சரோன் -166,ஹ.தினோஜன் -164,சு.விதிசிகா -163, அ.அயிசனா -161,கி.அரோன் -160, தெ. அபிசன் -160, எஸ்.சஞ்சயன்- 160 ஆகியோர் சித்தி பெற்றுள்ளனர். (ஐ-159)

### கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயம்

வெளியான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயத் தில் 6 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்திபெற்றுள்ளனர்.
சி.கஜானனன் 177,க.கவிசா 165, ந.ஆகீஸ்-164, சு.கஸ்வின்-162, ஜெ.மருசன்-160, ச.ஷயன் -160 ஆகியோர் சித்திபெற்றுள்ளனர். (ஐ-159)

### பரந்தன் இந்து மகா வித்தியாலயம்

வெளியான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் பரந்தன் இந்து மகா வித்தியாலயத்தில் 5 மாண வர்கள் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்திபெற்றுள்ளனர்.
இ.லிபானுஜன்- 179, த.ஜீவிதன்- 174, சி.நிரஜா -171, த.தர[illegible] -169, ச.மதுவர்மன்-161 ஆகி யோர் சித்திபெற்றுள்ளனர். (ஐ-222)

# 10 மாணவர்களுக்கு 200

வெளியாகியுள்ள 2020 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் 10 மாணவர்கள் 200 புள்ளிகளை பெற்று சாதனை படைத்துள்ளனர்.

இதன்படி காலி சங்கமித்த கல்லூரி மாணவி எஸ்.டி. சியதி வி.சந்துன்டி கருணாதிலக, கண்டி உயர்தரப் பெண்கள் கல்லூரி மாணவி ஜெகெரா ஜெத்மினி, கொழும்பு ஸாஹிராக் கல்லூரி மாணவன் மொஹமட் அமார் உள்ளிட்ட 10 பேர் 200 புள்ளிகளைப் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

இதற்கு முன்னர் 2007 ஆம் ஆண்டில் மாணவர் ஒருவர் 200 புள்ளிகளைப் பெற்றிருந்தார். அதற்கு பின்னர் 200 புள்ளிகள் பெறப்பட்ட இரண்டாவது சந்தர்ப்பம் இதுவாகும். (ஐ)


மொஹமட் அமார்!


ஜெகெரா ஜெத்மினி

*யாழ்.மாவட்டத்தில்*


## 195 புள்ளிகளைப் பெற்ற நான்கு மாணவர்கள்

யாழ்ப்பாணம், நவ.17

வெளியான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளில் 195 புள்ளிகளை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நான்கு பிர பல பாடசாலை மாணவர்கள் பெற்றுள்ளனர்.


சந்திரகுமார் ஆர்வலன்


அஞ்ஜிதன் அஜினி,


மதியழகன் மகிசன்

யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலை மாணவன் சந்திரகுமார் ஆர்வலன், யாழ்.புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலய மாணவி அஞ்ஜிதன் அஜினி, கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை மாணவன் மதியழகன் மகிசன், யாழ்ப்பாணம் அளவெட்டி அருணோதயக் கல்லூரி மாணவி சி. லிவின்சிகா ஆகியோர் 195 புள்ளிகளைப் பெற்று மாவட்டத்தில் இரண்டாவது இடத்தில் உள்ளனர்.(ஐ)

*மன்னார் மாவட்டத்தில்*

## புனித சவேரியார் பெண்கள் பாடசாலை முதலிடத்தில்

மன்னார், நவ.17

வெளியான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மன்னார் புனித சவேரியார் பெண்கள் பாடசாலையைச் சேர்ந்த மாணவி றொசான்னா சைலின் ரவீந்திரன் 195 புள்ளிகளைப் பெற்று மாவட்ட ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.


றொசான்னா சைலின் ரவீந்திரன்


நாயோலின் அப்ரியானா குபேரகுமார்,

இதேவேளை அதே பாடசாலையைச் சேர்ந்த மாணவி நாயோலின் அப்ரியானா குபேரகுமார், மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை மாணவன் சதீஸ்வரன் பிரியகன் ஆகியோர் 194 புள்ளிகளைப் பெற்று மாவட்ட ரீதியில் 2 ஆம் இடத்தைப் பெற்றுள்ளனர்.

மன்னார் கோட்டத்தில் 110 மாணவர்களும், நானாட்டான் கோட்டத்தில் 28 மாணவர்களும், முசலி கோட்டத்தில் 6 மாணவர்களும் மொத்தமாக மன்னார் கல்வி வலயத்தில் 144 மாணவர்களும் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்திபெற்றுள்ளனர். (ஐ-56)

## இறம்பைக்குளம் மகளிர் வவுனியாவில் முதலிடம்



வெளியான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலய மாணவி அஸ்வின்யா ஜயந்தன் 196 புள்ளிகளைப் பெற்று மாவட்ட ரீதியில் முதலிடம் பெற்றுள்ளார்.

## ஸ்ரீ சுப்பிரமணியம் வித்தி முல்லைத்தீவில் முதலிடம்

வெளியான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை மாணவன் முரளிதரன் அஸ்விகன் (தமிழ்மொழி மூலம்) 196 புள்ளிகளைப் பெற்று சித்திபெற்றுள்ளார்.



முல்லைத்தீவு மாவட்டத்தில் முல்லை வலயத்தில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கையில் 289 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் எடுத்து சித்தியடைந்துள்ளனர் என முல்லை வலயக்கல்விப் பணிப்பாளர் உமாநிதி புவனராஜா தெரிவித்துள்ளார்.

புதுக்குடியிருப்பு சிறீசுப்பிரமணிய வித்தியசாலையில் 46 மாணவர்களும், விசுவமடு விஸ்வநாதர் ஆரம்ப பாடசாலையில் 39 மாணவர்களும், நெத்தலியாறு வித்தியாலயத்தில் 6 மாணவர்களும், வற்றாப்பளை மகாவித்தியாலயத்தில் 10 மாணவர்களும், வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தி பெற்றுள்ளனர். (ஐ-19)

## வடக்கில் முதலிடம் மாணவி கௌரவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 17

நேற்றுமுன்தினம் வெளியான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் 198 புள்ளிகளைப் பெற்று வடக்கு மாகாணத்தில் முதலிடம் பெற்ற தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவியான சுபாஸ்கரன் ஜனுஸ்கா, தேசிய சேமிப்பு வங்கியின் சுன்னாகம் கிளையினரால் நேற்று கௌரவிக்கப்பட்டுள்ளார். இந்த நிகழ்வில் கிளை முகாமையாளர் திருமதி சித்திரா தயானந்தன், மாணவியின் பெற்றோர், பாடசாலை அதிபர் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஒ,5)




*35 வருடங்களின் பின்னர்*

## பாடசாலைக்கு பெருமை சேர்த்த மாணவன்

யாழ்ப்பாணம், நவ.17

வெளியான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 35 வருடங்களின் பின்னர் காட்டுப்புலம் அரச தமிழ் கலவன் பாடசாலையில் மாணவர் ஒருவர் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல பெற்று சித்தியடைந்துள்ளார்.



சுரேஷ் தபிஸ்ரன் என்ற மாணவனே 179 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.

மிகவும் பின்தங்கிய பிரதேசத்தில் இருக்கும் காட்டுப்புலம் அரச தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்று திறமைச் சித்திகளை பெற்ற இம் மாணவன் பாடசாலைக்கும் சமூகத்துக்கும் பெருமைசேர்த்துள்ளார். (ஐ-27)

## பாடசாலை வரலாற்றில் முதற்தடவையான சித்தி

முல்லைத்தீவு, நவ.17

வெளியான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் முல்லைத்தீவு ஜயன்கன் குளம் மகாவித்தியாலயத்தில் முதன் முறையாக மூன்று மாணவர்கள் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தி பெற்றுள்ளனர்.



சு.டிசான், ஆ.கிருத்திகா, கி.ஜெர்சன் ஆகிய மூன்று மாணவர்களே வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் மிகப் பின்தங்கிய பிரதேசத்தில் இந்தப் பாடசாலை அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-19)

# மஞ்சள் இறக்குமதிக்குத் தடை: 50 கோடியை இழந்த இந்தியா!

கொழும்பு, நவ.17
இலங்கையில் மஞ்சள் தூள் இறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், இந்திய வர்த்தகர்களுக்கு சுமார் 50 கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தமிழகம் ஈரோடில் அதிகளவில் மஞ்சள் வர்த்தகம் இடம்பெறுகின்ற நிலையில், அங்கிருந்து கடந்த காலங்களில் இலங்கைக்கு மஞ்சள் இறக்குமதி செய்யப்பட்டு வந்தது. இலங்கையில் தற்போது மஞ்சள் இறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதால், அது தமிழகத்தில் உள்ள மஞ்சள் உற்பத்தியாளர்கள் மற்றும் வர்த்தகர்களை கடுமையாகப் பாதித்துள்ளது என்று ஈரோட் மஞ்சள் வணிகர்கள் சங்கத்தின் செயலாளர் எம். சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார். (ற-இ)

## தற்காலிகமாக மூடப்பட்டது ஹபராதுவ பிரதேசசபை!

ஹபராதுவ பிரதேச சபையைத் தற்காலிகமாக மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பிரதேசசபையின் தவிசாளர் தில்ஷன் விதானகமகே தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரதேசசபை யில் கடமையாற்றும் பெண்ணொருவரின் கணவர், கொரோனாத் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டதையடுத்தே, பிரதேசசபையின் செயற்பாடுகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்தார். (ற-இ)

## ஜனவரி முதல் மீண்டும் விவசாய ஓய்வூதியம்



கொழும்பு, நவ.17
தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள விவசாயிகளின் ஓய்வூதியத் திட்டம் ஜனவரி முதலாம் திகதி முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்று கமத்தொழில் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

பொலநறுவை மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற வாழ்வாதார அபிவிருத்திக் குழுவின் கலந்துரையாடலில் இத் தீர்மானம் எட்டப்பட்டது. மாவட்டத்தில் நெல் சாகுபடியை அதிகரிப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் துணை உணவுப் பயிர்கள், காய்கறிகள் மற்றும் பழங்களுக்கான காப்பீட்டுத் திட்டமொன்றை அறிமு கப்படுத்துவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன், உர மானியம் பெறும் விவசாயிகளிடமிருந்து ஒரு ஹெக்டேயருக்கு 1000 கிலோ நெல் கொள்வனது செய்வது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என அமைச்சர் குறிப்பிட்டார். (ந-ரி4)

## ரிஜ்வே மருத்துவமனையில் மேலும் ஒருவருக்கு கொரோனாத் தொற்று

கொழும்பு, நவ.17
கொழும்பு சீமாட்டி ரிஜ்வே சிறுவர் மருத்துவமனையின் பணிக்குழாமின் பணியாளர் ஒருவரும் தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளது. மாளிகாவத்தை பகுதியைச் சேர்ந்த அந்த நபரின் சகோதரர் ஒருவருக்கு ஏற்கனவே கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது என மருத்துவமனையின் பணிப்பாளர் பி. விஜயசூரிய தெரிவித்துள்ளார்.

அங்கு மருத்துவர் உள்ளிட்ட 14 பணிக்குழாமினருக்கு இதுவரை கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)




## இடர்தவிர்ப்புத் தொடர்பில் கண்டாவளையில் கூட்டம்!

முல்லைத்தீவு, நவ.17
அனர்த்தங்களைத் தடுப்பது தொடர்பான முன்னாயத்தக் கூட்டம் நேற்று கண்டாவளைப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. கண்டாவளைப் பிரதேச செயலாளர் த. பிருந்தாகரன் தலைமையில் இந்தக் கூட்டம் இடம்பெற்றது.

இதன்போது கண்டாவளைப் பிரதேசத்தில் அனர்த்தம் ஏற்படக்கூடிய பகுதிகள் தொடர்பில் ஆராயப்பட்டதுடன், அவற்றி லிருந்து மக்களைப் பாதுகாத்தல், பாதுகாப்பான அமைவிடங்களை அடையாளம் காணல் உள்ளிட்ட பல விடயங்கள் ஆராயப்பட்டன. இந்தக் கூட்டத்தில் மாவட்ட இடர் முகாமைத்துவ நிலைய உத்தியோகத்தர்கள், கிராமசேவையாளர்கள், படையினர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ற-6)

## சீனன்குடாவில் விமானிகளாக இரண்டு பெண்கள் நியமனம்!

திருகோணமலை, நவ.17
திருகோணமலை சீனன்குடாவில் உள்ள விமானப் படை அக்டமியில் நேற்றுக் காலை இரண்டு பெண் அதிகாரிகள் விமானிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர். இலங்கை விமானப்படை வரலாற்றில் முதல் முறையாக பெண் அதிகாரிகள் விமானிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர் என்று இலங்கை விமானப்படை அறிவித்துள்ளது. (ற-இ)



## இன்றைய நாள்

**மேடம்:** நல்லதும் அல்லதும் கலந்து நிகழும். தைரியம் தேவை. யாருக்கும் மத்யஸ்தம் செய்வதற்காக மூக்கை நுழைக்காதீர்கள். எதையும் சமாளிக்கும்படியான மனப்பயிற்சி கிடைக்கும். மனைவி உதவுவார்.

**இடபம்:** தேடிக்கொண்டிருந்த முக்கியப் பொருள் கைக்குக் கிடைக்கும். பெற்றோரின் ஒத்துழைப்புக் கிடைக்கும். பண விவகா ரங்களில் இருந்து வந்த பிரச்னைகள் தீரும்.

**மிதுனம்:** குடும்பத்தில் பெண்களின் கை ஓங்கும். கவனம் சிதறும். பணியில் அதிக கவனம் தேவை. உடல்நலம் மேம்படும். பிடித்தவர்களைப் பல காலம் கழித்து சந்திப்பீர்கள்

**கடகம்:** அலுவலக ரகசியங்களை கையாளுவதில் கவனம் தேவை. பணியில் உடனிருப்பவர்களுடன் கவனமாகப் பழகுவது நல்லது. மதிக்கும் பிரபலத்தின் சந்திப்பு கிடைப்பதால் மகிழ்ச்சி ஏற்படும்.

**சிம்மம்:** இலக்கை நோக்கி முன்பைவிட வேகமாக முன்னேறுவீர்கள். பொது விவகாரத்தில் ஈடுபட்டுப் புதுப் பொறுப்புகளை ஏற்பீர்கள். முயற்சியால் முன்னேறுவீர்கள். பய உணர்வு நீங்கும்.

**கன்னி:** உங்களால் பயனடைந்தவர்கள் தக்க சமயத்தில் ஆதரிப்பர். பழைய நண்பர்களின் வருகையால் உற்சாகம் அடைவீர்கள். எதிர்நோக்கியிருக்கும் சவால்களை முடித்து மகிழ்வீர்கள்.

**துலாம்:** கணவரின் பிரச்னைகள் தீர உதவியாக இருப்பீர்கள். புதிய சாதனை ஒன்றால் புருவங்கள் உயரச் செய்வீர்கள். முன்பிருந்த குற்ற உணர்வு நீங்கும்படியாக நடப்பீர்கள்.

**விருச்சிகம்:** மனதில் மகிழ்ச்சி ஏற்படும்படியான சம்பவங்கள் நடக்கும். மனதைரியம் அதிகரிக்கும். வாக்கு வன்மையால் ஜெயித்து நன்மை ஒன்றை அடைவீர்கள்..

**தனுசு:** கடன் கொடுத்ததில் வராதிருந்த பாக்கிகள் வசூலாகலாம். அலுவலகத்தில் நல்ல நண்பர்கள் கிடைப்பார்கள். உழைப்பு கூடும். சுபநிகழ்வு தொடர்பான பயணங்கள் செல்ல நேரிடக்கூடும்.

**மகரம்:** பணியாளர்கள் கூடுதலாக உழைத்து மதிப்புப் பெறுவீர்கள். நண்பர்களிடையே வெளி நபர்களால் குழப்பம் ஏற்படலாம். பெற்றோரின் ஆசி கிடைக்கும்.

**கும்பம்:** சாதுர்யத்துடன் செயல்பட்டு சிரமங்களில் இருந்து மீளுவீர்கள். அடுத்தவர் ஆலோசனைகளைக் கேட்பதைத் தவிர்க்க வேண்டும்.

**மீனம்:** சிறு தவறால் முன்னேற்றம் தாமதமாவதற்கு வாய்ப்புள்ளது. கவனத்துடன் செயல்பட்டால் வெல்லலாம். புதியவர்கள் நட்பு பற்றிக் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

# அடுத்த கொத்தணியாக ரயில் சேவை உருப்பெறும்

## எச்சரிக்கின்றது ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கம்



**கொழும்பு, நவ.17**
**ரயில் சேவையைப் பயன்படுத்தும் பயணிகளின் சுகாதாரப் பாதுகாப்பு மிகப்பெரும் அச்சுறுத்தல் நிலையில் காணப்படுகின்றது என என ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கத்தின் பிரதான செயலர் கசுன் சாமர தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் குறிப்பிடுகையில், சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ள பாதுகாப்பு அம்சங்கள் ரயில் சேவையில் முழுமையாக செயற்படுத்தப்படவில்லை.
இவ்வாறான நிலை தொடருமாயின் கொவிட்-19 வைரஸ் பரவலின் அடுத்த கட்டமாக ரயில் சேவை பெயர் பெறும். ரயில் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கும் இதர புகையிரத சேவையாளர்களுக்கும் முகக் கவசம்,மற்றும் சுகாதார உபகரணங்கள் ஏதும் வழங்கப்படவில்லை.
ரயிலில் பயணிகள் ஒரு மீற்றர் தூர இடைவெளியில் பயணம் செய்யவில்லை.
ரயில் சேவையில் நவீன தொழிநுட்ப வசதிகளை செயற்படுத்து மாறு திணைக்களத்துக்கு செயற்றிட்டங்களைச் சமர்ப்பித்தோம். ஆனால் இதுவரையில் சாதகமான நடவடிக்கைகள் ஏதும் முன்னெடுக்கப்படவில்லை.
குறைபாடுகளுக்கு மத்தியில் ரயில் சேவை நடைமுறைப்படுத்தப்படின் கொவிட்-19 வைரஸ் தாக்கத்தின் மூன்றாம் சுற்றின் அடுத்த கட்ட பரவல் ரயில் சேவை என பெயர் பெறும் - என்றார். (ந-இ)

---

மேல் மாகாணத்தில்

# போக்குவரத்து தடை நீக்கம்

கொழும்பு, நவ.17
மேல் மாகாணத்தில் இருந்து வெளியேறுவதற்கு விதிக்கப்பட்ட தடை நேற்று முன்தினம் ஞாயிறு இரவு 12 மணியுடன் நீக்கப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.
எனினும் மேல் மாகாணத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள இடங்களைச் சேர்ந்தவர்கள் அங்கிருந்து வெளியேற முடியாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.
கொரோனா அச்சநிலைமை காரணமாக மேல் மாகாணத்திலிருந்து வெளியேறுவதற்கு கடந்த 11 ஆம் திகதி நள்ளிரவு முதல் தடைவிதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-இ)

---

# புரளி கிளப்பிய மற்றொருவரும் கைதாகினார்!!!

கொழும்பு, நவ. 17
கொரோனாவால் வீதிகளில் மக்கள் விழுந்து உயிரிழக்கின்றனர் என சமூக ஊடகங்களில் போலித் தகவலை வெளியிட்ட மற்றுமொரு நபர் கைது செய்யப்பட்டுள்ளார். 28 வயது இளைஞனே இவ்வாறு குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்.
இதுவரை இரண்டு சந்தேகநபர்கள் இந்தக் குற்றச்சாட்டுக்களில் கைதாகி உள்ளனர். (ஒ.இ)

---

# மாடு வெட்டியவர் பொலிஸாரால் கைது

கொடிகாமம், நவ.17
கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட குடமியன் பகுதியில் மாட்டை வெட்டி. இறைச்சியாக்கி விற்பனை செய்த நபர் ஒருவர் நேற்று முன்தினம் கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.
தீபாவளிக்கு முதல் நாள் 40 ஆயிரம் ரூபா பெறுமதியான மாட்டை வெட்டி விற்பனை செய்த நபரைக் கைது செய்த கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ந-159)

---




# ஆர்.டி.எஸ். தலைவரின் மகனே வாளுடன் கைது!

## மக்கள் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, நவ. 17
புதுக்குடியிருப்பு தேராவில் கிராம அபிவிருத்தி சங்க தலைவரின் மகனே நேற்று முன்தினம் வாளுடன் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர் என கிராம மக்கள் புதுக்குடியிருப்பு பிரதேச செயலருக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளனர்.
கிராமத்தைக் கட்டிக்காக்க வேண்டிய கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைவரின் மகனே கிராமத்தைச் சீர்குலைக்க வாளுடன் நடமாடித்திரிகின்ற நிலையில் கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைவர் பதவியில் அவர் இருக்கத் தகுதியற்றவர் என்றும் அவரை உடனடியாக மாற்றம் செய்ய வேண்டும் என்றும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலருக்கு கிராம மக்கள் ஒன்றிணைந்து கடிதத்தைக் கையளித்துள்ளார்கள். (ஒ.15)

---

# சடலங்களை வைத்து அரசியல் செய்யாதீர்!

## பகவந்தலாவ ராகுல ஹிமி வேண்டுகோள்

கொழும்பு, நவ.17
'சடலங்களை வைத்துக்கொண்டு அரசியல் செய்வதற்கு இடமளிக்க வேண்டாம்' என பகவந்தலாவ ராகுல ஹிமி வேண்டுகோள் விடுத்துள்ளார். இவ் விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;
இஸ்லாமியர்களின் மனதைக் காயப்படுத்தி, அவர்களை கோபத்துக்குள்ளாக்காதீர்கள். இறந்தவர்களின் உடலை எரிப்பது பாவமென்று இஸ்லாமிய தர்மம் கூறியுள்ளது. இறந்தவர்களின் உடலுக்கு மரியாதை செய்ய வேண்டும். வெளிநாடுகள் பலவற்றில் சடலங்கள் எரிக்கப்படவில்லை.
சுகாதாரத்துறை என்ன கூறுகிறதோ அதையே நடைமுறைப்படுத்துகிறார்கள். உலக சுகாதார ஸ்தாபனத்தின் வழிகாட்டலின் கீழ் சடலங்களை அடக்கம் செய்வதற்கு ஜனாதிபதி ஆவண செய்ய வேண்டும் என அவர் வலியுறுத்துள்ளார். (ந-இ)

---

# முப்படையினரின் கண்காணிப்பில் 3,168 பேர்

கொழும்பு, நவ.17
முப்படையினாரால் நடத்திச் செல்லப்படும் தனிமைப்படுத்தல் நிலை யங்களில் 3ஆயிரத்து 168பேர் தொடர்ந்தும் தனிமைப்படுத்தல் செயற்பாட்டுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அவர்களுடன் நேற்று அதிகாலை கட்டாரிலிருந்து நாடு திரும்பிய 12 பேரும் , இந்தோனேஷியாவில் இருந்து நாடு திரும்பிய 78 பேரும் தனிமைப்படுத்தல் செயற்பாடுகளுக்கான அனுப்பிவைக்கப்படவுள்ளனர். (வ-இ)

---

# பாரம்பரிய சுற்றுலா நகரமாக பொலநறுவை அபிவிருத்தி

பொலநறுவை, நவ.17
பொலநறுவை மாவட்டத்தை பண்டைய மற்றும் சூழல் பாதுகாப்பான சுற்றுலாத் தலமாக அபிவிருத்தி செய்வதற்கான ஒதுக்கீடுகள் அடுத்த ஆண்டுக்குள் ஒதுக்கீடு செய்யப்படும் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.
மேலும், முறையான சுற்றுலா தகவல் மையமொன்றை பொலநறுவையை மையமாகக்கொண்டு ஆரம்பித்து, சுற்றுலா மேம்பாட்டு பணியகத்தால் உலக பாரம்பரிய சுற்றுலா நகரமாக சுற்றுலாப் பயணிகள் மத்தியில் ஊக்குவிப்பதற்கு விசேட வேலைத்திட்டமொன்றை தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.
அத்துடன், பொலநறுவை மாவட்டத்தில் வனஜீவராசிகள் வலயத்தை [illegible] அண்மித்த பகுதியில் சூழலுக்கு பாதுகாப்பான சுற்றுலாத் திட்டங்கள் என்பனவும் செயற்படுத்தப்பட தீர்மானிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார். (ந-ரி4)

# நினைவேந்தலைத் தடுக்க அரசும் படைகளும் தீவிரம்

## கஜேந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 17

நினைவேந்தலைத் தடுக்கும் நடவடிக்கையில் இந்த நாட்டின் ஜனாதிபதியும் அவரின் அரசும், படையினரும் மற்றும் பொலிஸாரும் சர்வாதிகாரப்போக்கில் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

இந்த நிலமை உருவாவதற்கு முழுப்பொறுப்பையும் ஏற்க வேண்டியவர்கள் யாரெனின், கடந்த பத்து ஆண்டுகளாக தமிழ்மக்களைப்பிரதிநிதித்துவப் படுத்தி ஐக்கிய நாடுகள் மனித உரிமைப்பேரவைவரை சென்று உள்நாட்டு விசாரணைக்குச் சந்தர்ப்பம் கொடுத்து, வெளிநாட்டு விசாரணையைத் தடுத்து போர்க்குற்றவாளிகளுக்கு எதிராகச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் விசாரணை உருவாகுவதைத் தடுத்து அவர்களைப் பாதுகாத்து பதவி ஏறுவதற்கு துணை நின்றவர்கள்தான் என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

முல்லைத்தீவு - மாங்குளம் பகுதியில் உள்ள வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் துப்புரவுப் பணி நேற்று நடைபெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார், கஜேந்திரன் மற்றும் பொதுமக்கள் இணைந்து துப்புரவில் ஈடுபட்டனர்.

அதில் கஜேந்திரகுமார் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா ஆபத்து நிலவுகின்ற இந்தக் காலகட்டத்தில், சட்டதிட்டங்களை மதித்து அதனைக் கடைப்பிடித்து நினைவேந்தலை மேற்கொள்வதற்கு மக்கள் தயாராக வேண்டும்.

தமிழ் மக்கள் வடக்கு கிழக்கில் இருந்து மொட்டுக்கட்சி சுதந்திரக்கட்சி சார்பாக நாடாளுமன்றுக்குத் தெரிவுசெய்யப்பட்டு இந்த அரசுக்கு முண்டு கொடுத்துக்கொண்டிருக்கின்ற தமிழ் பிரதிநிதிகள் அரசுக்கு ஒத்துழைப்பு வழங்குவதும் இந்த ஒடுக்கு முறை அரசு துணிந்து செய்வதற்கான வாய்ப்புக்களை கொடுத்துக்கொண்டிருக்கின்றது. இதனை மக்கள் புரிந்து கொள்ளவேண்டும். என்றார்.

கஜேந்திரன் தெரிவித்ததாவது:

துப்புரவு நடவடிக்கையின் போது, வன்னிவிளாங்குளம் வீதியில் முற்றுமுழுதாக பொலிஸார் மற்றும் படையினர் குவிக்கப்பட்டிருந்தனர். வீதியில் செல்பவர்களை விசாரித்தனர். சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி துப்புரவில் ஈடுபட்டபோதும் படையினரும் பொலிஸார் ஒளிப்படம் எடுத்தவாறு கண்காணித்துக் கொண்டிருந்தனர். -என்றார். (த-19)

# தேசியப் பட்டியலில் வரவுள்ள ஐ.தே.க. எம்.பி. இன்னும் மர்மம்

கொழும்பு, நவ. 17

பொதுத்தேர்தல் நடைபெற்று 100 நாள்கள் கடந்துவிட்டனவெனினும், வாக்குகளின் அடிப்படையில், அதுவும் தேசியப் பட்டியல் மூலமாகக் கிடைத்த ஒரேயொரு நாடாளுமன்ற உறுப்பினர் யார் என்று இதுவரை அறிவிக்கப்படவில்லை.

கடந்த ஓகஸ்ட் 5ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் இலங்கையின் பழம்பெரும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கு நேரடியாக எவ்வித ஆசனங்களும் கிடைக்கப் பெறவில்லை. ஆனால் அளிக்கப்பட்ட செல்லுபடியான வாக்குகளில் குறைந்தபட்சம் 5 சதவீதமான வாக்குகளைப் பெற்றதையடுத்து அந்தக்கட்சிக்கு தேசியப்பட்டியலில் ஓர் இடம் ஒதுக்கப்பட்டது. ஆனால்தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் யார் என்பது இன்னும் வெளியிடப்படவில்லை.

ஐக்கிய தேசியக்கட்சியின் பிரமுகர்களிடம் இது தொடர்பாக வினவியபோது அடுத்த வருடத்தில்தான் இதற்குத் தீர்வு காணப்படக்கூடிய சாத்தியம் இருப்பதாகச் சுட்டிக்காட்டினர்.

இதேவேளை, கால அவகாசம் இன்றி தேசியப் பட்டியலுக்கான பிரதிநிதியை நியமிப்பதை கட்சிகள் தாமதப்படுத்த முடியுமா? என்று தேர்தல் ஆணைக்குழுவிலிருந்து ஓய்வுபெற்றுச் செல்லும் ஆணைக்குழு அங்கத்தவர் ரட்ணஜீவன் ஹூலிடம் கேட்டபோது, இந்த விடயத்தில் எவ்வித சட்டங்களிலும் சுட்டிக்காட்டப்படவில்லை என்று தெரிவித்தார்.

தேசியப்பட்டியலுக்கான நாடாளுமன்ற உறுப்பினர் யார் என்பதை ஐக்கிய தேசிய்க்கட்சி மாத்திரமல்ல தேரர்களின் கட்சி எனப்படும் எமது மக்கள் சக்தியும் இன்னமும் அறிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (த-இ)

# வறுமையைக் குறைக்க மட்டுமன்றி நல்ல மனிதர்களாகவும் திகழுங்கள்

## வேலைவாய்ப்பில் இணைக்கப்பட்டவர்களுக்கு செயலர் அறிவுரை

யாழ்ப்பாணம், நவ. 17

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஓர் இலட்சம் வேலைவாய்ப்பு வழங்கும் திட்டத்தில் முதற்கட்டமாக இணைக்கப்பட்ட நீங்கள், உங்கள் குடும்பத்தின் வறுமை நிலையை குறைக்க முறையான பயிற்சிகளைப் பெற்று சமூகத்தில் சிறந்த பிரஜைகளாக மிளிர வேண்டும் என்று யாழ்ப்பாண மாவட்ட செயலர் க.மகேசன் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு என்ற தொனிப்பொருளில் வறுமைக்குட்பட்டோருக்கு தொழில் வாய்ப்பு வழங்குவதற்காக உருவாக்கப்பட்டதே தேசிய இளைஞர் படையணி. இதற்குத் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சியின் ஆரம்ப நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நேற்று நபெற்றது.

இதற்கென வடக்கிலிருந்து முதற்கட்டமாக 306 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு 14 நாள்கள் பயிற்சிகள் நடைபெறும். அதன் பின்னர் அவர்கள் அரச வேலைவாய்ப்பில் இணைக்கப்படுவர் என்று ஜனாதிபதி முன்னரே தெரிவித்துள்ளார்.

எனவே நீங்கள் இந்தத் தொழில் வாய்ப்பு மூலமாக பயிற்சி பெற்ற தொழிலாளர்களாக வேண்டும்.

எமது இளைஞர்கள் வறுமை காரணமாக மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்று பல்வேறு துயரங்களுக்கு உள்ளாகின்றார்கள். ஒவ்வொருவருக்கும் படித்தவர்கள் படிக்காதவர்கள் என்ற பேதமில்லாது ஏதோவொரு திறமையுள்ளது. என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-20)

# வலி.மேற்கு சபையில் நிறைவேறியது பாதீடு

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் பட்ஜெட் நேற்று நிறைவேற்றப்பட்டுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகையின் கீழுள்ள வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் அமர்வு நேற்று நடைபெற்றது. சபைத் தவிசாளர் வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்தார்.

அதன் மீதான விவாதம் நடைபெற்ற பின்னர் நடைபெற்ற வாக்கெடுப்பில் ஒருவர் மட்டும் எதிர்ப்புத் தெரிவித்தார். ஏனையவர்கள் ஆதரித்தனர். அதனால் பெரும்பான்மை ஆதரவுடன் வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது. 25 உறுப்பினர்களைக் கொண்ட இந்தச் சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியமைத்து வருகின்றது. இங்கு கூட்டமைப்பில் 9, முன்னணியில் 6, ஈ.பி.டி.பி. 4, ஐ.தே.க. 3 மற்றும் சுயேச்சைக்குழு 2 உறுப்பினர்கள் என மொத்தமாக 24 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர். சபையின் சுதந்திரக் கட்சி உறுப்பினர் ஒருவர் மட்டும் எதிராக வாக்களித்தார். (த)


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
03 . 10 . 1954



மறைவு
29 . 11 . 2019

திருமதி ஜெயரத்தினம் இராசகுமாரி
(ஓய்வுபெற்ற தாதியர்)

குடும்பத்தின் ஜீவனாகி
குலவிளக்காய் நீரிருந்தீர்
கொடுங்காலம் வந்ததுவோ
கொண்டும்மைச் சென்றதுவோ
ஆண்டொன்று போனாலும்
ஆறாது உம் பிரிவு மீண்டுந்தான் காண்பதற்கு
கண்ணீரால் தான் நனைந்து கரைகின்றோம்
எம் வாழ்வை மண் மீது உமை எண்ணும்
மனதோடு வாழ்கின்றோம்.

கைதடி தென்கிழக்கு,
செட்டியார் வளவு, கைதடி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

# கேள்வி அறிவித்தல் - நல்லூர் பிரதேச சபை
# சபைநிதி வேலைத்திட்டம் 2020 (கட்டம் 1II)

01. தலைவர் பெறுகைக்குழு நல்லூர் பிரதேச சபை கொக்குவில் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ் குறிப்பிட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு வேலைகளுக்காக கோருகின்றார்

02. தேசிய போட்டிக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் 2019.05.08 ஆம் திகதி 04/2016 (11) ஆம் இலக்க பொது சுற்றறிக்கை **3.2** பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளபடி பிராந்திய விருப்பம் மற்றும் CIDA தர முன்னுரிமைகள் பொருந்தும்.

03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி புனரமைப்பு வேலைகளுக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

04. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிக்கப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை ( Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் '**தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில்** எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம் - **021-222-2700 ,021-3142841**) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் **தலைவர் பெறுகைக்குழு நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில்** என்னும் இடத்திலிருந்து **2020.11.17** ம் **திகதியிலிருந்து 2020.12.07** ம் **திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 தொடக்கம் பி.ப 3.00 வரையும்** மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2000.00 (வரி நீங்கலாக) பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

07. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்** என்னும் முகவரிக்கு **2020.12.08** ம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும் பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

08. கேள்வி பிணை வைப்புத் தொகையினை கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அனுமதிக்கப்பட்ட வங்கியில் செலுத்தி அதன் உண்மைப் பிரதியினை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

09. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் **2020.12.01** ஆம் திகதி நல்லூர் பிரதேச சபை கலாச்சார மண்டபத்தில் மு. ப. **10.00** மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்திற்கு ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் கலந்து கொள்ள முடியும்.

| இல | வேலை விபரம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (Vat நீங்கலாக) | மீளளிக்கப் படாத கேள்விப்பத்திரக் கட்டணம் (VAT, NBT நீங்கலாக) | வேண்டப் படும் தரமும் | கேள்வி விண்ணப்பம் சமர்ப்பிக் கப்படும் திகதியிலிருந்து செல்லுபடியாகும் காலம் | | வேண்டப்படும் கேள்விப் பிணை | | ஒப்பந்த காலம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | செல்லுபடி யாகும் காலம் | செல்லுபடி யாகும் திகதி | பிணை வைப்பு | செல்லுபடி யாகும் காலம் | |
| | **வீதி புனரமைப்பு வேலைகள்** | | | | | | | | |
| 1. | கலாசாலை வீதி முத்துத்தம்பி பாடசாலை முன் 1ம் ஒழுங்கை, கலாசாலை வீதி முத்துத்தம்பி பாடசாலை முன் 3ம் ஒழுங்கை, புனரமைப்பு திருநெல்வேலி. | 1.225 | 2,000.00 | C9/C8 | 49 நாட்கள் | 25.01.2021 | 19,000.00 | 22.02.2021 | 90 நாட்கள் |
| 2. | நீதிராசா குறுக்கு வீதி, கேணியடி இடது பக்க 1ம் ஒழுங்கை, கேணியடி இடது பக்க 2ம் ஒழுங்கை, கேணியடி இடது பக்க 3ம் ஒழுங்கை, கேணியடி இடது பக்க 4ம் ஒழுங்கை, கேணியடி வலது பக்க 4ம் ஒழுங்கை பொன்னையா வீதி, பூநாறி 2ம் ஒழுங்கை புனரமைப்பு கொக்குவில் | 2.201 | 2,000.00 | C8/C7 | 63 நாட்கள் | 08.02.2021 | 35,000.00 | 08.03.2021 | 90 நாட்கள் |
| 3. | புதிய செங்குந்தா வீதி, முக்குறுணிப்பிள்ளையார் வீதி புனரமைப்பு கல்வியங்காடு | 2.241 | 2,000.00 | C8/C7 | 63 நாட்கள் | 08.02.2021 | 35,000.00 | 08.03.2021 | 90 நாட்கள் |
| 4. | அரியாலை கிழக்கு முள்ளி 1ம் ஒழுங்கை இடது பக்க 3ம் உப ஒழுங்கை, ஸ்ரீ முத்தி விநாயகர் கோவில் வீதி புனரமைப்பு- அரியாலை | 2.065 | 2,000.00 | C8/C7 | 63 நாட்கள் | 08.02.2021 | 31,000.00 | 08.03.2021 | 90 நாட்கள் |
| 5. | முத்தட்டுமடம் 2ம் வீதி உப ஒழுங்கை, சைவப்பாடசாலை வலது பக்க 3ம் ஒழுங்கை, கே.கே.எஸ் வீதி உப ஒழுங்கை, தபாற்கந்தோர் முன் ஒழுங்கை புனரமைப்பு- கோண்டாவில். | 2.204 | 2,000.00 | C8/C7 | 63 நாட்கள் | 08.02.2021 | 34,000.00 | 08.03.2021 | 90 நாட்கள் |
| 6. | வீரபத்திரர் கோவில் வீதி குறுக்கு உப ஒழுங்கை, செபஸ்ரியார் தேவாலய வீதி, புதுக்கோட்டை வீதி, பலாலி வீதி வலது பக்க (11) உப ஒழுங்கை, பலாலி வீதி வலது பக்க(13) உப ஒழுங்கை), எம்.எஸ் வீதி 3ம் குறுக்கு ஒழுங்கை புனரமைப்பு- கோண்டாவில். | 2.033 | 2,000.00 | C8/C7 | 63 நாட்கள் | 08.02.2021 | 31,000.00 | 08.03.2021 | 90 நாட்கள் |
| 7. | கே.கே.எஸ் வீதி குறுக்கு ஒழுங்கை, பிரம்படி வீதி 1ம் குறுக்கு ஒழுங்கை, மஞ்சவனபதி கோவில் பின் வீதி, மணியபதி முருகன் கோவில் வீதி புனரமைப்பு- கொக்குவில். | 2.447 | 2,000.00 | C8/C7 | 63 நாட்கள் | 08.02.2021 | 38,000.00 | 08.03.2021 | 90 நாட்கள் |
| 8. | பொற்பதி 1ம் குறுக்கு உப ஒழுங்கை-1, பொற்பதி 1ம் குறுக்கு உப ஒழுங்கை-2, பொற்பதி 6ம் ஒழுங்கை, பலாலி குறுக்கு வீதி (நீர் வழங்கல் கிணற்றுக்கு எதிர்ப்பக்கம்) தாயகம் 2ம் ஒழுங்கை புனரமைப்பு கொக்குவில் | 2.328 | 2,000.00 | C8/C7 | 63 நாட்கள் | 08.02.2021 | 35,000.00 | 08.03.2021 | 90 நாட்கள் |
| 9. | வளாக வீதியை காப்பெற் வீதியாக புனரமைத்தல் - திருநெல்வேலி | 2.001 | 2,000.00 | C8/C7 | 63 நாட்கள் | 08.02.2021 | 31,000.00 | 08.03.2021 | 90 நாட்கள் |
| 10. | வளாக வீதியில் நடைபாதை அமைத்தல்- திருநெல்வேலி | 4.550 | 2,000.00 | C8/C7 | 63 நாட்கள் | 08.02.2021 | 69,000.00 | 08.03.2021 | 90 நாட்கள் |
| 11. | தொழில்நுட்பக்கல்லூரி முன்வீதி புனரமைத்தல் | 0.700 | 2,000.00 | C9/C8 | 49 நாட்கள் | 25.01.2021 | 11,000.00 | 22.02.2021 | 90 நாட்கள் |
| | **வடிகால் அமைப்பு வேலைகள்** | | | | | | | | |
| 12. | தலங்காவில் பிள்ளையார் கோவில் வீதிவடிகாலமைப்பு புனரமைத்தல் திருநெல்வேலி. | 0.600 | 2,000.00 | C9/C8 | 49 நாட்கள் | 25.01.2021 | 9,000.00 | 22.02.2021 | 90 நாட்கள் |
| 13. | முள்ளி வீதி, மதகு அமைத்தல், அரியாலை | 0.450 | 2,000.00 | C9/C8 | 49 நாட்கள் | 25.01.2021 | 7,000.00 | 22.02.2021 | 90 நாட்கள் |
| | **மீள்தாரிடல் வேலைகள்** | | | | | | | | |
| 14. | **மீள்தாரிடல் வேலை தொகுதி 01** MS வீதி 7ம் ஒழுங்கை, MS வீதி 8ம் ஒழுங்கை, MS வீதி முனியப்பர் ஒழுங்கை, MS வீதி முனியப்பர் கோவில் அருகாமை ஒழுங்கை, MS வீதி சைவப்பாடசாலை குறுக்கு ஒழுங்கை, விவேகானந்தா உபவீதிகள், ஐயந்தனை வீதி,அருணகிரிநாதர் வீதி, கலட்டி 2ம் உப ஒழுங்கை(முத்தட்டுமடம் இணைப்பு வீதி), கே.கே.எஸ் வீதி 4ம் குறுக்கு ஒழுங்கை (வைரவர் கோவில் அருகாமை), கே.கே.எஸ் வீதி 3ம் குறுக்கு வீதி (நெசவுசாலை வீதி கே.கே.எஸ் வீதி 2 ம் குறுக்கு வீதி, (தபாற்கந்தோர் முன் வீதி),கே.கே.எஸ் வீதி 1ம் குறுக்கு வீதி, ஆசாரி வீதி,கலட்டி வீதி மற்றும் உப ஒழுங்கை,சீக்கோ வீதி – கோண்டாவில் | 0.974 | 2,000.00 | C9/C8 | 49 நாட்கள் | 25.01.2021 | 15,000.00 | 22.02.2021 | 90 நாட்கள் |
| 15. | **மீள்தாரிடல் வேலை தொகுதி 02** அரசடி உபஒழுங்கை, குமரகோட்டம் வீதி 2ம் ஒழுங்கை,குமரகோட்டம் வீதி 1ம் ஒழுங்கை,அன்னங்கை குறுக்கு வீதி (புதுக்கோட்டை வீதி),வீரபத்திரர் வீதி உப வீதிகள், கோகுலவீதி –கோண்டாவில் | 0.659 | 2,000.00 | C9/C8 | 49 நாட்கள் | 25.01.2021 | 10,000.00 | 22.02.2021 | 90 நாட்கள் |
| 16. | **மீள்தாரிடல் வேலை தொகுதி 03** கலைவாணி அம்பாள் வீதி , CCTMS பாடசாலை 1ம் 2ம் உப ஒழுங்கைகள், மணியர்பதி வீதி மற்றும் உபவீதி,முதலிகோவில் 1ம் ஒழுங்கை,நாகலிங்கம் வீதி 1ம் உபவீதி, நாகலிங்கம் வீதி 2ம் உபவீதி , கேணியடி வீதி 2ம் குறுக்கு வீதி, கேணியடி வீதி,வராகியம்மன் முன்வீதி 1ம் ஒழுங்கை, வராகியம்மன் முன்வீதி 2ம் ஒழுங்கை,வராகியம்மன் வடக்கு வீதி, சிரமதானவீதி மற்றும் அடைக்கலநாயகி வீதி- கொக்குவில் | 1.086 | 2,000.00 | C9/C8 | 49 நாட்கள் | 25.01.2021 | 17,000.00 | 22.02.2021 | 90 நாட்கள் |
| 17. | **மீள்தாரிடல் வேலை தொகுதி 04** அச்சுக்கூட வீதி மற்றும் உப ஒழுங்கைகள்,சம்பியன் வீதி 7ம் ஒழுங்கை,கே.கே.எஸ் குறுக்கு வீதி, தலையாழி இணைப்பு வீதி உப ஒழுங்கை,பிரம்படி 2ம் ஒழுங்கை,குளப்பிட்டி வீதி, கல்லூரி வீதி, பொற்பதி உபவீதி பிறவுண் வீதி உபஒழுங்கை (திறந்த பல்கலைக்கழகம் முன்பாக) கலட்டி முந்தல் 2ம் உப ஒழுங்கை,காளிகோவில் வீதி –கொக்குவில் RK வீதி (பலாலி குறுக்கு வீதி)- திருநெல்வேலி | 1.695 | 2,000.00 | C9/C8 | 49 நாட்கள் | 25.01.2021 | 26,000.00 | 22.02.2021 | 90 நாட்கள் |
| 18. | **மீள்தாரிடல் வேலை தொகுதி 05** கலாசாலை வீதி 2ம் குறுக்கு வீதி (2/2,கலாசாலை வீதி 2ம் குறுக்கு வீதி (3/4) ), கலாசாலை வீதி 2ம் குறுக்கு வீதி (R/5) ,கலாசாலை வீதி 2ம் குறுக்கு வீதி), கட்டையாலடி மயான வீதி (2/2) ),கட்டையாலடி மயான வீதி 2ம ஒழுங்கை,முருகன் வீதி, அரசடி வீதி 5ம் ஒழுங்கை, அரசடி வீதி . பரமேஸ்வரா வீதி 1ம், 2ம் ,3ம் 4ம், 5ம்,மற்றும் 6ம் ஒழுங்கைகள்,சிவகாமியம்மன் கோவில் வீதி, மாரியம்மன் வீதி 2ம் ஒழுங்கை-திருநெல்வேலி ஆறுமுகம் வீதி, ஞானபாஸ்கரோதயா வீதி- , கொண்டலடி செங்குந்தா வீதி வீரபத்திரர் வீதி-கல்வியங்காடு | 2.271 | 2,000.00 | C8/C7 | 63 நாட்கள் | 08.02.2021 | 35,000.00 | 08.03.2021 | 90 நாட்கள் |
| 19. | **மீள்தாரிடல் வேலை தொகுதி 06** இளையதம்பி வீதி,முள்ளி வீதி 1ம் ஒழுங்கை,மணிப்புரி நாவலடி வீதி- அரியாலை. | 0.906 | 2,000.00 | C9/C8 | 49 நாட்கள் | 25.01.2021 | 14,000.00 | 22.02.2021 | 90 நாட்கள் |

தலைவர்
பெறுகைக்குழு
நல்லூர் பிரதேசசபை,
கொக்குவில்.

2020.11.17

## தரம் 06 (2021) அனுமதிக்கான விண்ணப்பம் கோரல்

**யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில்**

தரம் 06 (2021) அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. **அலுவலக நேரத்தில் விண்ணப்பப் படிவத்தை** பாடசாலையில் இலவசமாகப் பெற்று பூர்த்தி செய்து **27.11.2020** இற்கு முன்னர் அதிபர் காரியாலயத்தில் சமர்ப்பிக்கும் படியாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

**அதிபர்**
**யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை**
**பருத்தித்துறை.**

## இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்

**LED TV REPAIRING COURSE**

**(LED தொலைக்காட்சி திருத்தும் பயிற்சி)**

மூன்று மாதங்களுக்குள் 12 வகுப்புகள்
**தொலைக்காட்சிப் பெட்டி உபகரணங்கள் மூலம் செயன்முறை செய்து பயிற்சி அளித்தல்**

**ஆரம்பம் 2020.11.22 காலை 9.00 மணிக்கு**

தொடர்பு:
**HAPPY HOLIDAY INN**
K.K.S.றோட், மல்லாகம்,
பெற்றோல் செட் முன்பாக

தொ.பேசி.இல.:-
**076 588 4170,0710934705, 0212241283**

Reg.No:- Pv61562

# கேள்வி அறிவித்தல்

## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை.

## சபை நிதி - 2020

01. தவிசாளர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை அவர்கள் தகுதி வாய்ந்த வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோருகின்றார்.
02. விலைக் கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
03. பொது நிர்வாகச் சுற்றறிக்கை 4/2016(ii) இற்கமைவாகவும் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக்கொள்ளப் படாதவ ராகவும், அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில் கட்டுமான அமைப்புக்கான சிடா (CIDA) பதிவு மேற்கொள்ளப் பட்டிருத்தல் வேண்டும்.
04. தேவையான தகைமைகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி 04 (Section IV) இலும் மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) இலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.
05. அக்கறை கொண்டுள்ள தகைமையுடைய விலைக் கேள்வியாளர்கள் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை (தொலைபேசி 021-205-0037 , தொலைநகல் 021-205-0036 இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர் ஆங்கில மொழியிலான விலைக் கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றை தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை என்னும் முகவரியில் 17.11.2020ஆம் திகதியிலிருந்து 27.11.2020 ஆம் திகதி வரை காலை 9.00 மணியிலிருந்து பிற்பகல் 16.00 மணி வரையும், 30.11.2020 ம் திகதி காலை 9.00 மணியிலிருந்து பிற்பகல் 14.00 மணிக்கும், இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு கேள்வி ஆவணத்திற்கும் ரூபா 2000.00 (VAT நீங்கலாக) செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.
06. விலைக்கேள்விகள் இரு பிரதிகளில் தயாரித்து தவிசாளர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை எனும் முகவரிக்கு 30.11.2020ஆம் திகதி பிற்பகல் 14.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப் படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.
07. கேள்வி தொடர்பான முதற்கூட்டம் பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை என்னும் முகவரியில் அமைந்துள்ள அலுவலகத்தில் 23.11.2020ஆம் திகதியன்று பிற்பகல் 14.00 மணிக்கு நடைபெறும். இதில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ள முடியும்.
08. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப் பொறுப்பு கேள்வியுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
09. சமர்பிக்கப்பட்ட கேள்விகளை நிராகரிக்கவோ அல்லது மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழுத்தலைவருக்கு அதிகாரம் உண்டு.

**கட்டுமானம்**

| கேள்வி அடையாள இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை VAT நீங்கலாக (Rs Mn) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணைவைப்பு (Rs) | செல்லுபடி யாகும் காலம் |
| NP/14/45(3)/PL/C.F/ W/35/2020 | Construction of Library Building at Iththavil (Stage II) | 4.55 | 3 மாதம் | C8 and C7 (கட்டுமானம்) | 80,000.00 | 01.03.2021 |

**வழங்கல்**

| கேள்வி அடையாள இலக்கம் | வேலை விபரம் | வீதி விளக்குகளின் எண்ணிக்கை | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|
| | | | பிணைவைப்பு (Rs) | செல்லுபடி யாகும் காலம் |
| NP/14/45(3)/PL/C.F/12/ 2020 | Supply of 50W LED Street Light at Pachchillaipalli Pradeshuya Sabah. | 430 Nos ±10% | 30,000.00 | 01.03.2021 |

10. தகமையுடைய கேள்விதாரர் கட்டுமானம் அல்லது வழங்கல் தொடர்பான கேள்வி ஆவணங்களினை பெற்றுக்கொள்ள முடியும்.

சுப்பிரமணியம் சுரேன்
தவிசாளர்,
உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு
பச்சிலைப்பள்ளி பிரதேசசபை,
பளை.

17.11.2020

## சுகாதாரத்துறை...

மும் கருத்துக்கள் பெறப்படும் என்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மூன்றாம் தவணை கல்வி நடவடிக்கைகளுக்காக பாடசாலைகள் நவம்பர் மாதம் 9 ஆம் திகதி திறக்கப்படவிருந்த நிலையில், அதனை இரு வாரங்களுக்கு ஒத்திவைத்தோம்.

நவம்பர் 23 ஆம் திகதி பாடசாலைகள் திறக்கப்படவேண்டும். எனினும், இது தொடர்பில் இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை.

சுகாதாரத் துறையினர், அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களிடம் கருத்துக்கள் பெறப்படும். அவற்றை அடிப்படையாகக்கொண்டும் மாணவர்களின் சுகாதார பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்கியும் மாணவர்களின் எதிர் காலத்தைக் கருத்திற்கொண்டும் இறுதி முடிவு எடுக்கப்படும் என்றார். (த-ஒ.44)

## அலுவலகத்தில்...

பொலிஸார் தெரிவித்தனர்.

சின்னதம்பி ரகுநாதன் (வயது -54) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அலு வலகம் நேற்று காலை நீண்ட நேரமாகத் திறக்கப்படவில்லை. சந்தேகம் ஏற்பட்டதால் அங்கு கடமையாற்றும் காவலாளிக்கு தொலைபேசி அழைப்பு ஏற்படுத்தியுள்ளனர். அவர் பதிலளிக்கவில்லை.


அலுவலகத்துக்குள்ளே எட்டிப்பார்த்த போது காவலாளி சடலமாக இருப்பதைக் கண்டுள்ளனர். இது தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர். (ஒ.26)

### ஆண்/பெண் வேலையாட்கள் தேவை


கோழிப்பண்ணையிலும் கோழி இறைச்சிக் கடைகளிலும் வேலை செய்வதற்கு வேலையாட்கள் தேவை.

தொடர்பு: **077 2718149**
Viber : **0041779243687**


# இருபத்தோராம், பதினாறாம் ஆண்டு நினைவலைகள்




செல்வன்
பாலகிருஷ்ணன் பிரதீபன்
தோற்றம் : 17.04.1981



செல்வன்
சிவநாதன் ரவிசங்கர்
தோற்றம் : 02.02.1981



செல்வன்
சுந்தரலிங்கம் சிவோத்தமன்
தோற்றம் : 23.03.1981



செல்வன்
பூரணமூர்த்தி கந்தர்வன்
தோற்றம் : 11.05.1981



செல்வன்
மரியரட்ணம் குணரட்னம்
தோற்றம் : 04.08.1981

**17.11.1999 : மறைவு**

**17.05.2004**

**இந்நாளில் ஹாட்லியின் மைந்தர்கள் ஆகிய நாம் உங்களை பெருமையுடன் நினைவு கூருகின்றோம்**

**இன்று 17.11.2020 செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியளவில் இன்பசிட்டி கடற்கரையில் சுகாதார விதிமுறைகளை பின்பற்றி நினைவு கூரல் நிகழ்வு நடைபெறும். இரத்ததான நிகழ்வு, கல்லூரி நினைவு நிகழ்வு பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.**

"ஹாட்லியின் மைந்தர்கள் நினைவு நிதியம்" ஏற்பாட்டாளர்கள்.

தொடர்பு : அ.டொமினிக் - 0774 666 259 / சு. கோகுலகுமார் - 0773 122 198 E-mail : hartleyboys@gmail.com

# ௯ம் ஆண்டு நினைவஞ்சலி

கருங்காலி, காரைநகரைப் பிறப்பிடமாகவும், அராலி வடக்கு வட்டுக்கோடையை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் சரோஜினிதேவி சிவஸ்கந்தா

**(ஓய்வுபெற்ற தொலைபேசி இயக்குநர், ஸ்ரீலங்கா தொலைத்தொடர்புத் திணைக்களம்**

**திதி: துதியை**



ஆறுதலாய் இருந்த அப்பாவும் வந்துவிட்டார் உங்களிடம்
ஆற்றுகைப் படுத்த யாருமில்லா உலகில் வாழுகிறோம்
பெற்றவர்கள் நீங்களில்லாமல் பெருந்துயரில் நாம்
உற்றவர், சுற்றவர் இருந்தென்ன உம் போலாகுமா?
முற்றும் இழந்துவிட்டோம் உம்மை
நற்றோராய் வளர்த்தீர் நடுவிலே சென்றுவிட்டீர்
நாற்திசையும் தேடுகிறோம் நாலுவார்த்தை பேசிட
காற்சட்டை போட்டு கட்டழகாய் வளர்த்த நாட்கள்
கோட், சூட் போட்டாலும் வந்திடுமோ அம்மா
பாற்சோறு ஊட்டி பக்குவமாய் வளர்த்தீர்
பாலூற்றி உம்மை பற்றியெரியவிட்ட பாவிகள் நாம்
மற்றோரை எல்லாம் வேற்றாரைப் பார்க்காமல்
ஒற்றுமையாய் ஒன்றிணைத்தீர் ஆனாலும்
சீற்றம் நீர்கொண்டால் சிங்கம் கூட ஓடிவிடும்
போற்றி போற்றி என்று சொன்ன பொல்லாத கடவுளும்
ஈற்றிலே விட்டுவிட்டான் பற்று வைத்த அம்மாவை.
கொட்டும் மழை பாராமல் எமக்காய் உழைத்த அம்மாவை
பெட்டியிலே போட்டு போகவிட்டோம்
சற்றும் எதிர்பாரா நேரத்தில் இருவரும் போய்விட்டீர்
நற்றவம் செய்துவிட்டோம் நானிலத்தில் உமைப்பெற
ஏற்றம் நாம் காண ஏணியாய் நீர் இருந்தீர்
ஏற்றியே தீபம் உமை வணங்க வைத்திட்டீர்
தேற்றிட எமக்கு இப்போ யாரிருக்கா அம்மா
சொற்கள் வரவில்லை உமைச் சொல்லிட சோர்ந்தே போகிறோம்
காற்றிலே நாம் அழைக்கும் குரல் - உம் காது வந்து சேராதோ.
கற்றறிந்த அம்மா கண்கலங்கி வாடுகின்றோம்
கண்ணீர் வந்து துடைத்துவிடும்

**தோற்றம் :14.09.1941**



**மறைவு : 28.10.2011**

**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

## திருமதி சரஸ்வதி இராமலிங்கம்

**(உடுவில் தெற்கு)**



**தோற்றம்**
**18.12.1937**

**மறைவு**
**16.11.2020**

காங்கேசன்துறையை பிறப்பிடமாகவும் உடுவில் தெற்கு மற்றும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி இராமலிங்கம் அவர்கள் நேற்று (16.11.2020) திங்கட்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சிற்றம்பலம் - அன்னமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராமலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மாணிக்கம், நடராசா மற்றும் கந்தசாமி, பத்மாவதி ஆகியோரின் அன்பு சகோதரியும், கலாவதி (சுவிஸ்), கலாறஞ்சன் (சுவிஸ்), கலாமோகன் (சுவிஸ்), கலாரூபன் (சுவிஸ்), கருணாகரன் (சுவிஸ்), காலஞ்சென்ற கலாநாதன் மற்றும் கலாநிதி (லண்டன்), சிவகரன் (உதவி பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், பருத்தித்துறை) ஆகியோரின் அன்புத் தாயும், இராஜசிங்கம், லிங்கேஸ்வரி, சிவாணி, செல்வகுமாரி, சத்தியபாமா, மாலினி, சிவகுமார், ஜெயவாணி (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், நல்லூர்) ஆகியோரின் அன்பு மாமியும், நிரோன்-தாரா, நிரேஸ்-சயங்கரி, நிவேத்-சாரா, சதீபன்-ஆரபி, ரமணன், சேயோன், மகிஷா, அனுஷா, விதுஷன், மிதுனன், கபிலன், கிஷானி, கிஷான், ராகவி, சாருதா, கேஷாயினி, அபிஷேகனி, அச்சுதன், லக்ஷாயினி, அம்சவி, அக்சரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆஜேஸ், ஆரியா, லேயன் ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2020) செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**15/1, பொற்பதி வீதி,**
**கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**021 222 1073**
**076 172 5533**

வடக்கு மாகாண... செயற்கை அவயவ தொழில்நுட்பவியலாளர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர், இதயத்துடிப்பு பதிவாளர், மூளை மின் இயக்கப்பதிவாளர், பொதுச்சுகாதார ஆய்வு கூட தொழில்நுட்பவியலாளர் மற்றும் பல தொழில்நுட்பவியலாளர் உள்ளிட்ட ஒன்பது பதவி நிலைகளுக்கும் நிறைவுகாண் மருத்துவ சேவையைச் சேர்ந்த மருந்தாளர், தொழில்சார் சிகிச்சையாளர் மற்றும் கதிரியலாளர் ஆகிய பதவி நிலைகளுக்கும் ஆள்சேர்ப்புக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என்று வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களம் அறிவித்துள்ளது. இதன் முடிவுத் திகதி எதிர்வரும் 30ஆம் திகதி என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான அறிவுறுத்தல்களை (www.health.gov.lk) சுகாதார அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.

ஆள்சேர்ப்புக்காக 2017/2018 க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றியவர்கள் விண்ணப்பிக்க முடியும். இவர்கள் சுகாதார அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் (www.health.gov.lk) ஊடாக மாத்திரமே இதற்றாக விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் இணையம் மூலமாக விண்ணப்பிப்பதற்கு உதவுவதற்காக வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் உள்ள பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைகளில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. விண்ணப்பிப்பதற்கு உதவி தேவையானவர்கள் அலுவலக நாள்களில் மு.ப 9 மணி தொடக்கம் பி.ப 4மணி வரை தேவையான ஆவணங்களுடன் செல்வதன் மூலம் விண்ணப்பிக்க முடியும். தெரிவு செய்யப்படுபவர்கள் ஒன்றரை தொடக்கம் இரண்டு ஆண்டுகளுக்கு அவர்கள் தெரிவு செய்யப்பட்ட துறைகளுக்குரிய பயிற்சி நெறிகளுக்கு உள்வாங்கப்படுவர்.

பயிற்சி ஆரம்பிக்கும் காலத்திலிருந்து அனைவருக்கும் கொடுப்பனவாக கணிசமான தொகை வழங்கப்படும். பயிற்சியின் நிறைவின்போது சித்தியடையும் அனைவருக்கும் நியமனம் வழங்கப்படும். மிக முக்கியமாக ஆள்சேர்ப்பின் போது மாகாண மற்றும் மாவட்ட கோட்டாக்கள் (ஒதுக்கீடுகள்) ஒதுக்கப்பட்டுள்ளன. அதனால் வடமாகாணத்தில் இருந்து விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளுக்கான வாய்ப்புகள் அதிகம். அத்துடன் வடமாகாணத்தில் இவ் மருத்துவ சேவைகள் சார்ந்த பதவி நிலைகளுக்கு பெருமளவான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. எனவே தகுதி வாய்ந்த அனைவரும் உடனடியாகவிண்ணப்பிப்பதன் மூலம் அரச வேலை வாய்ப்பையும் மக்களுக்கு சேவையாற்றும் சந்தர்ப்பத்தையும் பெற்றுக்கொள்ளலாம், என்றுள்ளது. (ஒ.5)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 20.10.2020 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் அடைந்த எமது அன்புத் தெய்வம்

**அமரர் திருமதி மகாலட்சுமி குகதாஸ்**

(BA, MED சைவ சித்தாந்த பண்டிதர்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (17.11.2020) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் அன்னாரது வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 19.11.2020 வியாழக்கிழமை இல்லத்திலும் நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.

குகதாஸ் (சின்ராஜ்)
குடும்பத்தினர்.
T.P: 077 4914251

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 12 . 10 . 1947 — மறைவு 18 . 10 . 2020



**அமரர் இராஜரட்ணம் தயாநிதி**

(சந்திரன் - சந்திரா ஸ்ரோர்ஸ், கொக்குவில் மேற்கு)

கடந்த 18.10.2020 ஞாயிற்றுக்கிழமை எமது குடும்பத் தலைவர் அமரர் இராஜரட்ணம் தயாநிதி அவர்கள் இறைவனடி சேர்ந்த வேளையில் எம் துயர் நீக்க நேரிலும், தொலைபேசியின் மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டோருக்கும் துண்டு பிரசுரம் பிரசுரித்த நண்பர்களுக்கும், எமக்கு உறுதுணையாய் நின்று உதவி புரிந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்.

அன்னாரின் சபிண்டீகரண கிரியையும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையும் இன்று (17.11.2020) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும்.

தற்போது நிலவும் கொரோனா சூழ்நிலை காரணத்தால் அன்னாரின் இறுதிக்கிரியையில் கலந்துகொண்ட அனைவரையும் வீட்டுக்கிருத்திய நிகழ்வில் அழைக்க இயலாமைக்கு மிகவும் வருந்துகின்றோம்.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில் — குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

பிறப்பு 11 . 04 . 1949 — இறப்பு 16 . 11 . 2020



**திருமதி செல்வராணி அருளம்பலம்**

காரைநகர் வேதரடைப்பை பிறப்பிடமாகவும் காரைநகர் சந்திரந்தை, மயிலணி சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வராணி அருளம்பலம் நேற்று காலை (16.11.2020) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-பூரணம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-செல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், வேலுப்பிள்ளை அருளம்பலத்தின் அன்பு மனைவியும், அருட்செல்வன், அருட்செல்வி, அருந்ததி, அருள்கலா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2020) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அருட்செல்வவாசகம்
26/30, மயிலணி வீதி,
சுன்னாகம்.

தகவல் :
குடும்பத்தினர்
(கணவர்)

## மரண அறிவித்தல்

தோற்றம் 26 . 04 . 1940 — மறைவு 16 . 11 . 2020



**யாக்கோப்பிள்ளை அமல உற்பவதி**

நெல்லியடியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் யாக்கோப்பிள்ளை அமல உற்பவதி 2020-11-16 நேற்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற யாக்கோப்பிள்ளையின் அன்பு மனைவியும், சந்தானநாயகி, கிறிஸ்துராசா, மேரியா, அமலநாயகன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், மதியாபரணம், தயாளினி, ஜெயராசா, வேணுகா ஆகியோரின் அன்பு மாமியாரும், சகாயரூபன், மேரிசுகந்தினி, மேரி கிறிஸ்ரெலா, சகாயஅன்ரனி, சந்தியா, சந்தோஷ், அஸ்ரின், அனுஸ்கா, அபிரா.ஜெனிஸ்ஸா ஆகியோரின் அன்பு பேர்த்தியும், ஜெஸ்னா,அமீஷா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் வைத்து எடுத்து செல்லப்பட்டு அந்தோனியார் ஆலயத்தில் ஆராதனைக்காக வைக்கப்பட்டு, கீரிப்பல்வி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ராணி மில் ஒழுங்கை,
நெல்லியடி கிழக்கு, கரவெட்டி.

தகவல் : குடும்பத்தினர்
0773414319, 0212263828

## மாவீரர்களை நினைவுகூர...

இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.

நவம்பர் 27ஆம் திகதி மாவீரர் நாள். தமிழர்களின் விடுதலைக்காகப் போராடி தமது உயிரை ஈந்த வீரர்களை நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்தும் நாள். ஆனால், இந்தமுறை தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கில் மாவீரர் நாளைப் பொதுவெளியில் நினைவேந்தத் தனிமைப்படுத்தல் சட்டத்தைக் காரணம் காட்டி கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தடையுத்தரவு பிறப்பித்துள்ளார். அதை மீறி நடத்தினால் தனிமைப்படுத்தல் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் நேற்று எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இராணுவத் தளபதியின் இந்த எச்சரிக்கை தொடர்பில் கருத்துரைக்கும்போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

"இலங்கையில் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காகத் தனிமைப்படுத்தல் சட்டம் நடைமுறையில் உள்ளமை தமிழ் மக்களுக்கு நன்கு தெரியும். எனவே, எமது மக்கள் அந்தச் சட்டத்திலுள்ள சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்களைப் பின்பற்றி தனியாள் இடைவெளியைப் பேணி உயிர்நீத்த தமது உறவுகளை எதிர் வரும் 27ஆம் திகதி நினைவுகூருவார்கள். இதை எவரும் தடுத்து நிறுத்த முடியாது. அவ்வாறு தடுத்து நிறுத்துவது பெரும் மனித உரிமை மீறலாகும்.

கடந்த ஆட்சியில் ஒவ்வொரு நவம்பர் 27 திகதியிலும் தமிழ் மக்கள், உயிர்நீத்த தமது உறவுகளை அவர்களின் கல்லறைகளுக்குச் சென்று மலர் தூவி அஞ்சலித்து நினைவுகூர்ந்தார்கள். இதை இந்த ஆட்சியிலும் நாம் எதிர்பார்க்கின்றோம்.

வேண்டுமென்றே நீதிமன்றங்களை நாடி தடை உத்தரவுகளைப் பெறும் நடவடிக்கைகளை இந்த அரசு கைவிட வேண்டும்" என்றார். (த-22)

## நினைவேந்தல்...

கின்றோம்."

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸா நாயக்க ஆகியோர் கூட்டாகத் தெரிவித்தார்கள்.

'மாவீரர் தின நினைவேந்தலைப் பொதுவெளியில் நடத்துவதற்கு இடமளிக்க முடியாது. அதை மீறி நடத்தினால் தனிமைப்படுத்தல் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்' என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா நேற்று எச்சரிக்கை விடுத்திருந்தார். இது தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர்கள் மேற்கண்டவாறு கூறினார்கள்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

"போரில் உயிரிழந்த தமது உறவுகளை நவம்பர் 27ஆம் திகதி தமிழ் மக்கள் நினைவுகூர்வது உயிரிழந்த தமிழீழ விடுதலைப்புலிகளுக்குப் புத்துயிர் கொடுக்கும் செயற்பாடு என்று இராணுவமோ அல்லது அரசோ தப்புக்கணக்குப் போடக்கூடாது. நாட்டில் தற்போது கொரோனா வைரஸின் தாக்கம் அதிகரித்திருப்பதால் சுகாதார வழிகாட்டல்களை முறையாகக் கடைப்பிடித்து அதற்கேற்ற மாதிரி நினைவேந்தல் நிகழ்வுகளில் தமிழ் மக்கள் பங்கேற்க வேண்டும்" என்று தெரிவித்தனர். (த-22)

## அரியாலையில்...

யில், அவர்களுக்கு கொரோனாத் தொற்று இல்லை என்பது நேற்று உறுதிசெய்யப்பட்டது. அவர்களுக்கு நேற்று நடத்திய பி.சி.ஆர். பரிசாதனைகளின் பின்னர் இது உறுதிப்படுத்தப்பட்டது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

லண்டனிலிருந்து வந்திருந்த ஒருவர், விடுமுறையை நிறைவுசெய்து மீண்டும் லண்டனுக்குச் செல்வதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து கடந்த 9ஆம் திகதி கொழும்புக்குச் சென்றிருந்தார். அங்கு கடந்த 11ஆம் திகதி நடத்திய பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டது. அதனையடுத்து, அவருடன் அரியாலையில் நெருக்கமாகப் பழகியவர்கள் மற்றும் தொடர்புடையவர்கள் என 15 குடும்பங்களைச் சேர்ந்த 62 பேர் சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்தனர்.

அவர்களுக்கு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஆய்வுகூடத்தில் நேற்று நடத்திய பி.சி.ஆர். பரிசோதனையிலேயே எவருக்குமே தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டது என்று மாகாணப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, வவுனியா மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த பெண் ஒருவருக்கும் கோரோனா வைரஸ் தொற்று உள்ளமை நேற்று நடத்திய பி.சி.ஆர். பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டது என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர், மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

டுபாய் நாட்டிலிருந்து வந்திருந்த அவர் வவுனியா பம்பைமடு தனிமைப்படுத்தல் மையத்தில் இருந்தார். நுரையீரல் நோயால் பாதிக்கப்பட்ட அந்தப் பெண் சிகிச்சைக்காக வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. இவர் உட்பட 118 பேருக்கு நேற்று பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. ஏனையோருக்கு தொற்று உறுதிப்படுத்தப்படவில்லை என்று மருத்துவமனைப் பணிப்பாளர் மேலும் குறிப்பிட்டார். (த-18)

## வெட்டுப்புள்ளியை...

ரில் 17.4 சதவீதத்தினர் வெட்டுப்புள்ளியைத் தாண்டியுள்ளனர். இது கடந்த ஆண்டு 16.3 சதவீதமாக இருந்த நிலையில் இந்த ஆண்டு அதிகரித்துள்ளது என வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் இ.இளங்கோவன் தெரிவித்துள்ளார். வடக்கிலிருந்து 18 ஆயிரத்து 158 மாணவர்கள் இந்த ஆண்டு பரீட்சை எழுதினர். இவர்களில் 3 ஆயிரத்து 167 மாணவர்கள் வெட்டுப் புள்ளியைத் தாண்டியுள்ளனர். (ஒ.5)

## கரணவாயில்...

நெல்லியடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கரணவாய் பகுதியில் நேற்றுக் காலை 12.45 மணிக்கு இந்தக் கொள்ளை சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஒரு காணிக்குள் இரண்டு வீடுகள் உள்ளன. ஒரு வீட்டில் 5 பேர் வசிக்கின்றனர். வீட்டு உரிமையாளரின் தந்தை வழமையாக வீட்டின் வெளியே இரவில் உறங்குபவர். வழமைபோன்று நேற்றும் அவர் உறங்கிக் கொண்டிருந்தபோது முகத்தை மூடியவாறு வந்த கொள்ளையர்கள், அவரைத் தாக்கியுள்ளனர். வீட்டாரிடம் சுடுநீர் கேட்டு கதவைத் தட்டுமாறு பணித்துள்ளனர். அவரும் வீட்டுக் கதவைத் தட்டியுள்ளார். வீட்டார் கதவைத் திறந்தபோது கொள்ளையர்கள் இருப்பதைக் கண்டு உடனடியாக கதவை மூடி அபயக் குரல் எழுப்பியுள்ளனர். யாரும் உதவிக்கு வராத நிலையில் கதவை உடைத்து உள்ளே புகுந்த கொள்ளையர்கள், அபயக் குரல் எழுப்பிய வீட்டாரைத் தாக்கியுள்ளனர். வீடு முழுவதும் சுமார் ஒரு மணி நேரம் நின்று சல்லடை போட்டு தேடுதல் நடத்தியுள்ளனர். 6 பவுண் நகை மற்றும் 15 ஆயிரம் ரூபா பணம் என்பவற்றை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். சுமார் 5 பேர் கொண்ட கும்பலே வீட்டினுள் நின்றதாகவும், மேலும் பலர் வீட்டின் வெளியில் நின்றிருக்கலாம் என்றும் வீட்டார் தெரிவித்தனர். வீட்டின் ஒரு பக்கமாக உள்ள வெற்றுக் காணியின் ஊடாகவே கொள்ளையர்கள் வந்திருக்க வேண்டும் எனவும் அவர்கள் குறிப்பிட்ட னர். கொள்ளையர்களின் கையில் வாள்கள், இரும்புக் கம்பிகள் என்பன இருந்தது எனவும் வீட்டார் பொலிஸ் முறைப்பாட் டில் தெரிவித்துள்ளனர். (ஒ.26)

## மாவீரர்களை நினைவேந்த...

முடியாது. மீறி கடைப்பிடித்தால் தனிமைப்படுத்தல் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கொரோனா தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா நேற்று எச்சரிக்கை விடுத்தார்.

மாவீரர் நாள் நினைவேந்தலைக் கடைப்பிடிப்பதற்கு வடக்கில் துயிலும் இல்லங்கள் துப்புரவு செய்யப்படுகின்றன.

இது தொடர்பில் அவரிடம் கேட்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டம் நடைமுறையில் உள்ளது. மக்கள் ஒன்றுகூடுவது தொடர்பில் சுகாதார பாதுகாப்பு வழிகாட்டல்கள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் வெளியிடப்பட்டுள்ளன. மேற்படி நடைமுறைகளை மீறி, ஏனையோரின் சுகாதார பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் பொதுவெளியில் எவராவது செயற்பட்டால் அவர்களுக்கு எதிராக பொலிஸாரால் நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும். உயிரிழந்த சாதாரண மக்களை நினைவுகூருவதற்கான உரிமை அவர்களின் உறவினர்களுக்கு இருக்கின்றது. அதனை வீட்டில் இருந்து செய்யலாம். ஆனால் பயங்கரவாத அமைப்பில் இணைந்து பெரிய அழிவுகளை ஏற்படுத்திவிட்டு உயிரிழந்தவர்களை அதுவும் பொதுவெளியில் குழுக்களாக இணைந்து நினைவுகூருவது ஏற்புடைய நடவடிக்கையாக இருக்காது. உலகில் எந்தவொரு நாடும் இதற்கு அனுமதி வழங்காது.

எனவே, புலிகள் அமைப்புக்கு புத்துயிர் கொடுக்கும் வகையிலும், அந்த அமைப்புக்கு பரப்புரை செய்யும் நோக்கிலும் பொதுவெளியில் நினைவேந்தல் நிகழ்வு நடத்தப்படுமானால், சுகாதார பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுமானால் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும், என்றார். (த-ஒ.44)

## கொரோனா சாவு...

கொழும்பு, நவ. 17

இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் நேற்றும் மூவர் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த ஆண்கள் இருவரும், பெண்ணொருவருமே உயிரிழந்துள்ளனர். இவர்கள் மூவரும் 60 வயதைக் கடந்தவர்கள். இதன்படி நாட்டில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 58 இலிருந்து 61 ஆக அதிகரித்துள்ளது. நேற்று உயிரிழந்தவர்களின் விவரங்கள் வருமாறு:

**59ஆவது சாவு**

மொரட்டுவ பகுதியைச் சேர்ந்த 84 வயதுடைய பெண்ணொருவர் வீட்டிலேயே உயிரிழந்துள்ளார். நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டிருந்த அவருக்குக் கொரோனா தொற்றியமையே சாவுக்கான காரணமாகும்.

60ஆவது சாவு

கொழும்பு 10 பகுதியைச் சேர்ந்த 78 வயதுடைய ஆணொருவர் கொரோனாத் தொற்றுக்கு இலக்கான நிலையில் கொழும்பு தேசிய தொற்று நோயியல் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார். சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்ட அவருக்குக் கொரோனாவும் தொற்றியமையே சாவுக்குக் காரணமாகும்.

**61ஆவது சாவு**

கொழும்பு 13 பகுதியைச் சேர்ந்த 75 வயதுடைய ஆணொருவர் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்படும்போது உயிரிழந்துள்ளார். தொற்றா நோயால் பாதிக்கப்பட்டிருந்த அவருக்குக் கொரோனாவும் தொற்றியதாலேயே உயிரிழந்துள்ளார் என்று அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. இதன்பிரகாரம் கொரோனாவின் மூன்றாம் அலையில் மாத்திரம் சிக்கி 48 பேர் உயிரிழந்துள்ளனர். கடந்த 25 நாள்களில் இந்தச் சாவுகள் பதிவாகியுள்ளன.

**நேற்றும் 387 பேருக்கு கொரோனாத் தொற்று**

இதேவேளை, இலங்கையில் நேற்றும் 387 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. அதற்கமைய நாட்டில் மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 17 ஆயிரத்து 674 ஆக அதிகரித்துள்ளது. தொற்றுக்குள்ளானவர்களில் இதுவரையில் 11 ஆயிரத்து 806 பேர் குணமடைந்துள்ளனர். (த-22)

## மயங்கி...

ருவர் உயிரிழந்தார் .இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் இருபாலையில் நேற்று முற்பகல் 10.30 அளவில் இடம்பெற்றது. இதே இடத்தைச் சேர்ந்த தெய்வேந்திரம் சரஸ்வதி (வயது-71) என்பவரே உயிரிழந்தார். அவர் மயங்கி வீழ்ந்ததும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டார். எனினும், அங்கு சேர்க்கப்படும்போது உயிரிழந்திருந்தமை பரிசோதனையில் தெரியவந்தது. உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சடலம் மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் விசாரணை நடத்தினார். (த-26)

முதலாம் பக்கத் தொடர்ச்சி

### வட்டு.பொலிஸின்...

டைப் பொலிஸார் அசமந்தமாகச் செயற்படுகின்றனர் என்று வலி.மேற்கு பிரதேச சபையினர் சுட்டிக் காட்டியுள்ளனர். இந்த விடயத்தை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் கவனத்துக்குக் கொண்டு செல்வது என்றும் வலி.மேற்கு பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சுழிபுரத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற இரட்டைப் படுகொலையை தடுத்து நிறுத்த முடியுமாக இருந்தபோதிலும் பொலிஸார் உரிய நேரத்தில் குறிப்பிட்ட இடத்துக்குச் செல்லாத காரணத்தாலேயே இந்தக் கொலை நடைபெற்றுள்ளது எனவும் சபையில் தெரிவிக்கப்பட்டது. பொலிஸாரின் இந்தச் செயற்பாட்டுக்கு சபையில் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

வலி.மேற்கு பிரதேச சபையின் 33 ஆவது அமர்வு தவிசாளர் த.நடனேந்திரன் தலைமையில் நேற்று நடைபெற்றபோதே மேற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதன்போது சுழிபுரம் குடாக்கனையில் இடம்பெற்ற இரட்டைப் படுகொலை தொடர்பாக உறுப்பினர்கள் கருத்துக்களை முன்வைத்தனர். இந்தப் பகுதியில் கசிப்பு உற்பத்தி இடம்பெறுவதனாலேயே அடிக்கடி இவ்வாறான படுகொலைகள் இங்கு நடைபெறுகின்றன என்று உறுப்பினர்கள் தெரிவித்தனர். கசிப்பு உற்பத்தி செய்பவர்களுக்கும் வட்டுக்கோட்டை பொலிஸாருக்கும் நெருங்கிய தொடர்புகள் உள்ளன எனவும் இதனாலேயே இங்கு கசிப்பு உற்பத்தியைக் கட்டுப்படுத்த முடியவில்லை எனவும் உறுப்பினர்கள் தெரிவித்தனர். இந்தப் பகுதியில் கசிப்புக் காய்ச்சுபவர்களின் பெயர் விவரங்கள் அடங்கிய பட்டியல் ஒன்று வட்டுக்கோட்டை பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் கடந்த வருடம் கையளிக்கப்பட்டது எனவும் அதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் சபையில் கருத்து முன்வைக்கப்பட்டது.

கடந்த வெள்ளி நள்ளிரவு மேற்படி படுகொலை நடைபெற்ற இடத்தில் மாலை வேளையே ஒருவர் தாக்கப்பட்டார். பின்னர் இரவு 10 மணியளவில் கொலையாளிகள் வாள்களுடன் நிற்கின்றனர் என்ற விடயம் வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு தொலைபேசியில் பல தடவைகள் அறிவிக்கப்பட்டது. எனினும் அவர்கள் அங்கு செல்லவில்லை. கொலை இடம்பெற்ற பின்னர் இராணுவத்தினர் அங்கு சென்று உடல்களை தமது வாகனத்தில் ஏற்றிச் சென்ற பின்னரே பொலிஸார் சென்றனர். எனவே, குறித்த படுகொலைக்கு பொலிஸாரும் உடந்தையாக இருந்தனரா என்ற கேள்வி எழுகின்றது எனவும் சபை உறுப்பினர்கள் தெரிவித்தனர். இறுதியில் ஜனாதிபதியின் கவனத்துக்கு இதைக்கொண்டுசெல்வது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதேவேளை, மேற்படி இரட்டைப் படுகொலை, குடாக்கனை கசிப்பு உற்பத்தி, பொலிஸாரின் நடவடிக்கைகள் போன்றனவற்றைக் கண்டித்து எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை சுழிபுரம் சந்தியில் அமைதியான கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்துவது என்றும் சபையில் தீர்மா னிக்கப்பட்டது. (த-20)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சாவகச்சேரி ஸ்ரீ ஐங்கரன் வெதுப்பகம் மற்றும் ஸ்ரீ ஐங்கரன் மணிமண்டபத்தின் உரிமையாளராகிய சுபாஸ்கரன் - துஷ்யந்தி தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வியும் யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை மாணவ தலைவியுமாகிய

**செல்வி**
**சு.ராகவி**

2020 ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் 170 புள்ளிகள் பெற்றமையையிட்டு மனமகிழ்வுடன் பாராட்டுவதுடன் அவர் மென்மேலும் பலகலைகளையும் கற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

பெரிய அரசடி,
சாவகச்சேரி.

திரு. திருமதி முருகதாசன் நிர்மலா
குடும்பத்தினர்
(மாமா அத்தை மச்சிமார்)

## நல்லூர் பிரதேச சபை
## வழங்குநர்களை பதிவு செய்தல்
## 2021

சபையானது 2021 ம் ஆண்டிற்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் சேவைகளை வழங்குவதற்கு தம்மை பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்களை ஏற்கவுள்ளது.

**பொருட்கள்**
1. காகிதாதி எழுதுபொருட்கள்
2. அலுவலக உபகரணங்கள் (தளபாடங்கள்)
3. சித்த மருத்துவ மருந்துகள்
4. நூலகங்களுக்கான நூல்கள்
5. துணி வகைகள்
6. கட்டட பொருட்கள் (சீமெந்து ஓடுகள் கம்பிவகைகள்)
7. கற்கள் மணல்
8. தீந்தை வகைகள் (Paints) நிறம் தீட்டும் பொருட்கள்
9. நீர் வழங்கும் குழாய்கள் மற்றும் ஏனைய பொருட்கள்
10. வாகன உதிரிப்பாகங்கள், துணைப்பொருட்கள்
11. மின்வழங்கு பொருட்கள்,மின்பாவனை பொருட்கள்
12. எரிபொருட்கள் உராய்வு நிக்கி
13. இரும்பு பொருட்கள்
14. தீராந்திகள், பலகைகள், சட்டங்கள்
15. பனைமரங்கள், சலாகைகள்
16. வாகனங்களுக்கான ரயர், ரியூப் மற்றும் மின்கலங்கள்
17. கணினி, பிரதியாக்கல் இயந்திரம் மற்றும் இவற்றுக்கான உதிரிப்பாகங்கள்
18. சுத்திகரிப்பு பொருட்கள், கிருமிநாசினிகள்
19. பாதணிகள், தோற்பொருட்கள், மழைஅங்கிகள்
20. அலங்காரப் பொருட்கள்
21. இலத்திரனியல் பொருட்கள்

**சேவைகள்**
1. அச்சிடுதல், பதாதைகள் அமைத்தல், ஸ்ரிக்கர் அச்சிடுதல், நூல்கள் கட்டுதல்
2. மோட்டார் வாகனங்கள், உழவு இயந்திரங்கள் திருத்துதல்
3. வாகனங்களுக்கு ரியூப் ஒட்டுதல், ரயர் மாற்றுதல்
4. ஒட்டுவேலைகள், உலோகவேலைகள்
5. கனரக வாகனங்களின் சேவை, வாடகைக்கு விடல்
6. மின்சாதனங்கள் திருத்தம், மீள மின் வலுவூட்டல்
7. இலத்திரனியல் சாதனங்கள் திருத்தம்
8. வாகனங்கள் சுத்திகரிப்பு
9. கோலவுடை தைத்தல்
10. கணினி, பிரதியாக்கல் இயந்திரம் திருத்தம், சுத்திகரிப்பு
11. இறப்பர் முத்திரை தயாரித்தல்
12. வீதி விளக்குகள் பொருத்துதல்
13. மயானங்களில் இறந்த உடல்களை எரியூட்டல்
14. வீதி, கட்டடம் புனரமைப்பு, நிர்மாண வேலை
15. கழிவகற்றல் சேவை (Gully emptier service)
16. சுத்திகரிப்பு சேவை
17. திண்மக்கழிவு தரம் பிரித்தல்
18. வீதியோரம், வடிகால் பராமரிப்பு சேவை

பதிவின் பொருட்டு வியாபாரப்பெயர்ப்பதிவுச் சான்றிதழின் பிரதி சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு பொருட்கள் சேவைக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும். படிவங்களை சபையின் தலைமை அலுவலகத்தின் நிதிக்கிளையில் 17.11.2020 ம் திகதியிலிருந்து 16.12.2020 ம் திகதி வரை அலுவலக நேரத்தில் ஓவ்வொரு விண்ணப்பத்திற்கும் பதிவுக் கட்டணமாக ரூபா 1000.00 (வரிகள் நீங்கலாக) செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்ப படிவங்கள் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"வழங்கல் சேவைக்கான விண்ணப்பம் 2021"** எனக் குறிப்பிட்டு நேரடியாகவோ / பதிவுத்தபால் மூலமோ **தவிசாளர், நல்லூர் பிரதேச சபை, இல 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில்** எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்ப படிவங்கள் **17.12.2020** ம் திகதி மு.ப 10.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். மேலதிக விபரங்களுக்கு 021-2222700 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தா.தியாகமூர்த்தி
தவிசாளர்
நல்லூர் பிரதேச சபை

17.11.2020

## பணி வெற்றிடம்
### ஊடக உதவியாளர்

**மேற்படி பதவிக்கு பின்வரும் தகைமையுடையோரிடம் இருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.**

- 20 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள்
- உயர்தரத்துக்கு குறையாத கல்வி
- கணினி அறிவு
- சமூகவலைத்தளப் பயன்பாட்டில் நிபுணத்துவம்
- தமிழ், ஆங்கில மொழியறிவு
- ஆவணப்படுத்தலில் தேர்ச்சி
- சாரதி அனுமதிப்பத்திரமுடையோர்

(பட்டதாரிகளும் விண்ணப்பிக்கலாம்)
சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்
**விண்ணப்பங்களை** tamiljob2020@gmail.com
**என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பிவைக்கவும்**

## இலங்கை வங்கி யாழ்ப்பாணக் கிளையின்
## 75வது ஆண்டு நிறைவு

வங்கியின் 75வது ஆண்டு நிறைவையிட்டு சமூகநல சேவைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. இதற்கமைய முகாமைத்துவக்குழு உருவாக்கப்பட்டுள்ளது.

'இலங்கை வங்கி யாழ்ப்பாணக்கிளையின் 75வது ஆண்டு நிறைவு வேலைத்திட்டம்' என்னும் பெயரில் சேமிப்புக் கணக்கு இலக்கம் 86533351 இலங்கை வங்கி யாழ்ப்பாணக் கிளையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. செயற்றிட்டங்களை நிறைவேற்றும் பொருட்டு இலங்கை வங்கியின் ஓய்வூதியர்கள் மற்றும் நலன்விரும்பிகளிடமிருந்து நிதிப்பங்களிப்பு கோரப்படுகிறது.


உதவி வழங்க விரும்பும் அனைத்து நல் உள்ளங்களையும் **15.12.2020** இற்கு முன்னராக பங்களிப்பு செய்யுமாறு முகாமைத்துவக்குழு கோருகிறது.

**தலைவர்**
**திருமதி.கே.துரைராஜா.**
**0779213631**

**செயலாளர்.**
**திரு.கே. உலகநாதன்**
**0776751839**

## மரண அறிவித்தல்

**தோற்றம்**
**02 • 07 • 1955**



**மறைவு**
**16 • 11 • 2020**

### இராசதுரை அருணாச்சலம்துரை

புத்தூர் மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாவும் கொண்ட இராசதுரை அருணாச்சலம்துரை (16.11.2020) அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் அருணாச்சலம்துரை குகானந்ததேவியின் அன்பு கணவரும். அருணாச்சலம்துரை கோபிராஜின் அன்பு தந்தையும். கோபிராஜ் ஜான்சியின் அன்பு மாமனாரும். ஜோன் ஜராட். ஜேர்லின் ஜெசிக்காவின் அன்பு பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் 17. 11.2020 காலை 10:00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்**

## எரானை 2 மணிநேரம் துருவினர் சி.ஐ.டியினர்

கொழும்பு, நவ. 17

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன மீது நேற்று 2 மணிநேரம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

விசாரணைக்காக அவருக்கு குற்றப் புலனாய்வுப் பிரிவு ஏற்கனவே அழைப்பு விடுத்திருந்தது.

அதற்கமைய நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் கொழும்பிலுள்ள குற்றப் புலனாய்வு பிரிவு அலுவலகத்தில் அவர் முற்பட்டார். அண்மையில் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட போதைப்பொருள் கடத்தல் வர்த்தகத்தின் பெரும் புள்ளி மாகந்துரே மதுஷ் மற்றும் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் முக்கிய சூத்திரதாரி சஹ்ரான் ஹாசீமின் மனைவி ஆகியோர் குறித்து ஊடக சந்திப்பொன்றில் வெளியிட்ட கருத்து தொடர்பிலேயே எரான் விக்கிரமரத்னவிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது. (த-22)

(முன்னர் வந்த செய்தி 8ஆம் பக்கத்தில்)

# மழை காரணமாக 16 குடும்பங்கள் யாழில் பாதிப்பு

யாழ்ப்பாணம், நவ. 17

கடந்த இரண்டு நாள்களாக யாழ்ப்பாண மாவட்டத்தில் காணப்பட்ட காற்றுடன்கூடிய மழை காரணமாக 16 குடும்பங்களைச் சேர்ந்த 58 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாண மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் சூரியராஜ் தெரிவித்தார்.

பத்து வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. மூன்று வீடுகள் முழுமையாகச் சேதமடைந்துள்ளன. நல்லூர், கோப்பாய், தெல்லிப்பளை, பருத்தித்துறை மற்றும் சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளுக்கு உட்பட்ட பகுதிகளிலேயே பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. அவற்றின் விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த-111)

## பிரதி தவிசாளராக பொறுப்பேற்பு

திருகோணமலை, நவ. 17

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபையின் பிரதி தவிசாளராக ஐக்கிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட இளைஞர் அமைப்பாளர் நௌபர் தமது கடமைகளை நேற்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

அவர் தனது கடமைகளை தவிசாளர் மருத்துவர் ஈ.ஜீ. ஞானகுணாளன் முன்னிலையில் பொறுப்பேற்றுக் கொண்டார். (த)

**விற்பனைக்கு**
பப்பாசி (ரேட்லேடி)
T.P: 077 507 0473

**சமையல் ஆள் தேவை**
தனிநபர் ஒருவருக்கு தினமும் 3 வேளை வந்து சமைத்து கொடுக்கக் கூடிய சமையல் ஆள் தேவை.
தொடர்பு:
077 959 2628

**காணி விற்பனைக்கு உண்டு**
**வீடு விற்பனைக்கு உண்டு**
யாழ்ப்பாணம் மானிப்பாய் உடுவில் றோட்டுடன் ஆனந்த வைரவர் கோயில் சந்திக்கு அருகாமையில் 2 பரப்புக் காணி நல்ல நிலையில் உள்ள ஒரு வீடும் 3 பரப்புக் காணியுடன். தொடர்பு: குரு
077 805 1655, 076 6400 974

**காணி விற்பனைக்குண்டு**
யாழ்ப்பாணம் ராச வீதியில்
(ராசவீதி சந்தி அருகாமை)
3 பரப்பு காணி உள்ளது.
பிரித்துக் கொடுக்கப்படும். யாழ் கோண்டாவிலில் 1 1/2 பரப்புக் காணி உள்ளது.
077 2880 152, 074 075 4204

VACANCIES
at a Leading
Educational Institution
in Jaffna



**Academic Coordinator**
Job Requirments:
- Bachelor's Degree is preferred
- Experience in any administrative environment.
- Age 25 to 40 years.
- Excellent communication & presentation skills in English & Local Languages.
- Fluent in MS-office softwares

**Marketing Executive - Front Office**
Job Requirments:
- Age 18 to 40 years.
- G.C.E. A/L Qualification is preferred
- Prior experience in similar positions will be added an advantage.
- Should be able to work on weekends.

Preference will be given to those who reside in Jaffna District.
Send your detailed CV to
info.globaleducationsystems@gmail.com
with the position applied for in the subject line of your e-mail.

**நான்காம் ஆண்டு நினைவு நாள்**



அமரர் திருமதி
செல்லத்துரை
தெய்வானைப்பிள்ளை

தோற்றம்
13 . 09 . 1935

மறைவு
17 . 11 . 2016



என்றென்றும் எங்களுடன் வாழ்ந்து
கொண்டிருக்கும் அம்மா!
உங்கள் ஆத்ம சாந்திக்காக
இறைவனை வேண்டுகின்றோம்.

ஆனைப்பந்தி
யாழ்ப்பாணம்
குடும்பத்தினர்

**31 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் நன்றி நவிலலும்**

தோற்றம்
03 . 07 . 1944

மறைவு
18 . 10 . 2020



அமரர்
திருமதி நாகேஸ்வரி
சரசானந்தராசா

கடந்த (18.10.2020) அன்று சிவபதமடைந்த அமரர் திருமதி நாகேஸ்வரி சரசானந்தராசா அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (17.11.2020) செவ்வாய்க்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அத்துடன் எம் மீளாத்துயரில் நேரிலும் தொலைபேசி ஊடாகவும் அனுதாபங்களைத் தெரிவித்து ஆறுதல் கூறியவர்களுக்கும். அத்தருணத்தில் சரீர உதவி உட்பட அனைத்து உதவிகள் புரிந்தவர்களுக்கும். இறுதிக்கிரியை நிகழ்வுகளில் பங்குபற்றியவர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

81, தொல்புரம் கிழக்கு,
சுழிபுரம்
021 790 2098
குடும்பத்தினர்



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.11.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.